Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 24 திங்கட்கிழமை (10.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 041

நன்றியுடன் வாழ்த்துகின்றோம்



இன்று தனது 57 ஆவது அகவையை
நிறைவுசெய்யும்
அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தாவுக்கு
எமது இனிய பிறந்த நாள்
நல்வாழ்த்துக்கள்

தினமுரசு குடும்பம்

## யாழ். - கொழும்பு இடையே மற்றுமொரு ரயில் சேவை

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மேலும் ஒரு ரயிலை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த மார்க்கத்தில் பயணிக்கும் ரயில்களில் அதிகளவான பயணிகள் பயணிப்பதே இதற்கு காரணம் என ரயில் போக்குவரத்து அதிகாரி

19 ஆம் பக்கம் பார்க்க

## இறைவனடி சேர்ந்தார் விகடகவி



(யாழ்ப்பாணம்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய மாவட்ட நீதிபதி முத்தையா திருநாவுக்கரசு (விகடகவி) வயது - 75 நேற்று இரவு 7.30 மணியளவில் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை

19 ஆம் பக்கம் பார்க்க

# தமிழருக்கான அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை பரவலாக்க வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நான் எனது நிலைப்பாட்டை தெரிவித்து வருகின்றேன்.

தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை பரவலாக்க வேண்டும் என்று நான் ஏற்றுக்கொள்வதன் காரணமாவே வடக்கிற்கு செல்லும் போது எனக்கு சிறந்த முறையில் வரவேற்பை வழங்குகின்றனர் என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த முறை வடக்கு மாகாணத்திற்கு சென்ற போது வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் நாள் முழுவதும் என்னுடன் இருந்து விமானத்திலும் ஏற்றி வழியனுப்பவும் வந்தார்.

அத்துடன் நான் கலந்து கொண்ட சகல கூட்டங்களிலும் அவர் என்னுடன் கலந்து கொண்டார்.

அத்துடன் வடக்கு மாகாண முதலமைச்சர் வெற்றிலை கொடுத்து மலர் மாலை அணிவித்து பிரதான ஆசனத்தில் அமரச் செய்து என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

எனது நிலைப்பாட்டை அவர்கள் மதிக்கின்றனர். நான் அரசாங்கத்திற்கு வருவதற்கு முன்னரும் அதிகாரத்தை பரவலாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வந்தேன்.

அதிகாரத்தை பரவலாக்க வேண்டும் என்பது எமது இரண்டு நிபந்தனைகளில் ஒன்று. அரசாங்கத்தில் உள்ள சிலர் அரசாங்கத்தின் மீது அதிருப்தி



யில் இருந்தாலும் எனக்கு இருப்பது கொள்கை ரீதியான பிரச்சினை மட்டுமே.

ராஜபக்ஷ குடும்பத்தினர் என்னை நன்கு உபசரிக்கின்றனர். பசிலாக இருந்தாலும் நாமலாக

19 ஆம் பக்கம் பார்க்க

## எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, புலோலி வடக்கு பகுதியில் வீடொன்றின் பின்புறமாக எரிந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சீடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## 29 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் திறக்கப்படுவதென்பது பொய்

### திட்டமிட்டபடி இன்று கவனயீர்ப்பு போர்

(யாழ்ப்பாணம்)

தற்காலிகமாக மூடப்பட்ட ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களில் 29 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் திறக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்ட விடயமானது உண்மையில்லையென யாழ். மாவட்ட உப உணவு மற்றும் குளிர்பான உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் மு.உதயசிறி நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

யாழ். மாவட்டத்திலுள்ள 59 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தால் தற்காலிகமாக மூடப்பட்டமை அனைவரும் அறிந்த விடயம்.


மலத்தொற்று, கிருமித்தொற்று, சுகாதார நடைமுறைகள் பின்பற்றவில்லை உள்ளிட்ட பல காரணங்கள் கூறப்பட்டு ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டன. இருந்தும் கூறப்பட்ட காரணங்கள் உரிய முறையில் நிரூபிக்கப்படவில்லை.

இந்நிலையில் நேற்று 29 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபையை முடக்குகிறது அரசாங்கம்

### சென்னையிலும் தெரிவித்தார் விக்கி



(சென்னை)

இலங்கை அரசு எங்களை வடக்கு மாகாணத்தில் செயற்படவிடாமல் தடுக்கிறது. அதுமட்டுமின்றி அதிகாரத்தை தம்வசப்படுத்தி தொடர்ச்சியாக எம்மைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கவே அது முயன்று வருகிறது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

தமிழ்நாட்டுக்கு சென்றுள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரன் நேற்று முற்பகல் 11 மணிக்கு சென்னை வள்ளுவர் கோட்டம் அருகேயுள்ள வித்யோதயா பாடசாலையில் கே.ஜி.கண்ணபிரான் நினைவு நிகழ்வில் உரையாற்றினார்.

இதன்போதே அவர் மேற்கணடவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையில் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சார்பாக 1987 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திட்டது. இதன்படி, அங்கு ஒற்றை ஆட்சி அரசியல் சட்டத்தின் கீழ் உண்மையான அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்க முடியவில்லை.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அரசியலமைப்பு சீர்திருத்தம்

### மீளவும் வலியுறுத்தும் ஹெல உறுமய

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் செய்யப்படாது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமானால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் எதிர்க் கட்சிகளில் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவார்கள் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

சாதாரண சமூகத்திற்கான மக்கள் இயக்கத்துடன் இணைந்து நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்..

“ஏகாத்திபத்திய அதிகாரங்களை நீக்கும் மக்கள் பேரணி” என்ற கருப்பொருளில் நவம்பர் 12 ஆம் திகதி மாலை கொழும்பு

19 ஆம் பக்கம் பார்க்க

## 18 ஆவது திருத்தச் சட்ட அமுல்; ஜனாதிபதிக்கே பாதகமான சூழல்

### என்கிறார் ரணில்

(கொழும்பு)

18 ஆவது திருத்தச் சட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கரமசிங்க தெரிவித்துள்ளார்.

18 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் ஜனாதிபதி மகிந்த பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரையும் இணைத்துக் கொண்டு 18 ஆவது திருத்தச் சட்டத்தினை நிறைவேற்றியமை

19 ஆம் பக்கம் பார்க்க



# மக்கள் தலைவரின் மகத்தான வெற்றிகள்

## அமைச்சர் டக்ளஸிற்கு சந்திரகுமார் எம்.பி. வாழ்த்து



தோழர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இன்று 57 ஆவது பிறந்தநாள். இதன் மறுபொருள் தமிழ் பேசும் மக்களுடைய மிகக் கடினமான அரசியற் பயணத்தில் வேறு எவரையும் விடக்கடினமான சவால களைச் சந்தித்தவருடைய அரசியல் வெற்றியின் திருநாள் என்பதாகும்.

1977 ஆம் ஆண்டு தன்னுடைய 20 ஆவது வயதில் அரசியலில் ஈடுபடத் தொடங்கிய தோழர் டக்ளஸ் தேவான ந்தா, இதன் பின்னரான 37 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில் இடையறாது விடுதலைப் பணியையும் மக்கள் நேயத் தையும் தன்வாழ்வாகக் கொண்டிருந்த வர். தமிழ் பேசும் மக்களுடைய மிகக் கடினமான அரசியற் பயணத்தில் வேறு எவரையும் விடக் கடினமான சவால்க ளைச் சந்தித்தவர் தோழர் டக்ளஸ் தேவானந்தா. ஆனாலும் இன்றும் புத்தி ளமையோடு மக்களுக்குச் சேவையாற்றி வரும் அரசியற் போராளியாகவே அவர் செயற்படுகிறார்.

இப்பொழுது பல தலைமைகள் புதிது புதிதாக வந்து மக்களுக்குப் பலவித மான தோற்றங்களைக் காட்டலாம். ஆனால், கடந்த 35 ஆண்டுகால அரசி யல் வரலாற்றில் தோழர் டக்ளஸ் தேவா னந்தா அளவுக்கு எவரும் மக்களின் மன தில் இடம்பெறவில்லை. எதிர்த்தரப்பு அர சியல்வாதிகளின் உள்ளுணர்விலும் தோழருக்குத் தனியான மரியாதையும் மதிப்பும் உண்டு என்பதை நான் நன்கறி வேன். இத்தகைய சிறப்புகளும் மாண் புமுடைய தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை அவரை நேசிக்கும் மக்க ளோடு இணைந்து வாழ்த்துகிறேன்.

அவருடைய மக்கள் பணிகள் மேலும சிறக்கட்டும். அதனால் எங்கள் மண்ணும் எங்கள் தேசமும் வளம்பெறட்டும். தொட ரட்டும் அவர் பணி. பரவட்டும் அவர் புகழும் சீரும் சிறப்பும்.

# வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



இன்று 57 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன் என ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ் திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள் ளர்.

தான் நேசிக்கும் மக்களின் அபிவிருத் திக்காக அரும்பாடுபடும் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா அவர்களின் பணி சிறக்க இந்த நாளில் மனதார வாழ்த்து கின்றேன்.

அரசியல் சாணக்கிய மதிநுட்பம் மூலம் அவரது அரசியல் பயணம் தொடர வாழ்த்துகின்றேன் எனத் தெரிவித்துள் ளார்.

# தமிழ் உலகின் தலைவன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

## - ஜீவன் வாழ்த்து -



தமிழர்களின் தன்னிகரில்லாத் தலை வர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை 57 ஆவது அகவையில் மனதார வாழ்த் துவதில் பெருமகிழ்வடைகின்றேன் என வலிகாமம் பிரதேச ஈ.பி.டி.பி.யின் அமை ப்பாளரும் வலி. மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

தமிழ்கூறும் நல்லுலகில் தமிழர்களின் வாழ்வியலுக்காக உண்மையாக, மெய் யாக உழைத்திடும் எமது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீடுழி காலம் பெருவாழ்வு வாழ்ந்து சேவை செய்திட வாழ்த்துகின் றேன் எனத்தெரிவித்துள்ளார்.


# 57 ஆவது அகவையில் இனிய வாழ்த்துக்கள்

## கே.என்.டக்ளஸ் தேவானந்தா



இமயம் என தோற்றம்
இனிமையெனக் குரல்
வெண்மையெனத்துகில்
வேல் போன்ற கண்கள்
எங்கள் அமைச்சர்
என்றும் அட்ட ஐஸ்வரியங்கள்
அனைத்தும் பெற்று பல்லாண்டு
வாழ இனிதே வாழ்த்துகின்றோம்.

நூலக உதவியாளர்கள் – 2014
பொதுசன நூலகம். யாழ்ப்பாணம்.

(R/371)



## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பெயர் : ப.சாரங்கன்
முகவரி :நவாலி கிழக்கு மானிப்பாய்.
10 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY



# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



10.11.2014 இல் தனது 57 ஆவது வயதை நிறைவு செய்யும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

பாரதி வீதி கோண்டாவில் மேற்கு புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் ரதத் தரிப்பு மண்டபத்திற்கு ரூபா 2 இலட்சம் நன்கொடை வழங்கியும், அடித்தளத்திற்கு அத்திபாரம் இட்டும் சிறப்பித்த தங்களுக்கு மண்டபத்தின் நான்காம் ஆண்டின் நிறைவினை சுஉர்ந்து ஆலயக் குடிமக்கள் சார்பில் மனம் நிறைந்த பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

துரைஐயா (நா.துரையன்)
பாரதி வீதி கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.

(R/370)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2579 திகதி 08-11-2014

ஆங்கில எழுத்து: S

வெற்றி எண்கள்: 32 35 47 57

போனஸ் இல: 15

ஜக்பொட் பரிசு ரூ.17,238,925/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 209628 | 20/- | 4,192,560/- |
| 2 இல | 14860 | 100/- | 1,486,000/- |
| 3 இல | 330 | 1,000/- | 330,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8384 | 40/- | 335,360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 651 | 1,000/- | 651,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 06 | 10,000/- | 60,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,238,925/- | - |
| 1 இல + போனஸ் இல | 9916 | 100/- | 991,600/- |
| 2 இல + போனஸ் இல | 459 | 500/- | 229,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 386 | 200/- | 77,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 244644 | | 9,781,720/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.11.12 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 17,810,000/-

வளமான வாழ்வித்து

அபிவிருத்தி லொத்தர் சபை

(3587)

PUBLIC LIBRARY
JAFFNA



# நுளம்புகளின் பெருக்கத்தால் வலிகாமத்தில் நோய் அபாயம்


## கவலை தெரிவிக்கும் மக்கள்

அண்மையில் தொடர்ந்து பெய்த மழையினால் வலிகாமம் பகுதியில் முன்னெப்பொழுதுமில்லாத அளவில் இந்த வருடம் நுளம்புத் தாக்கம் அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு காய்ச்சல் உட்பட ஏனைய பல நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இரவுவேளைகளில் மட்டுமல்லாது பகல் வேளைகளிலும் நுளம்புகளின் தாக்கம் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மல்லாகம், ஏழாலை, குப்பிளான் ஆகிய பகுதிகளில் நுளம்பு பெருக்கம் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கும் மக்கள் இந்த நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா



(யாழ்ப்பாணம்)

யாழ். வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் ஆ.சி.நடராஜா அரங்கில் வி.ரி.ஜயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த 2012 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தர வர்த்தகப் பிரிவில் 3 ஏ சித்தி பெற்று கல்லூரிக்கும் சமூகத்திற்கும் தான் பிறந்து வளர்ந்த குப்பிளான் மண்ணிற்கும் பெருமை சேர்த்த மாணவன் இ.தனுசன் கல்லூரிச் சமூகம் சார்பாகத் தங்கப் பதக்கம் வழங்கிக்கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் குறித்த தங்கப் பதக்கத்தை அணிவித்துக் கௌரவித்தார்.

அத்துடன் கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் இ.தனுசன் உட்பட பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான ஏனையமாணவர்களும் பணப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

"விடாமுயற்சி வெற்றியின் திறவுகோல்" இதற்குத் தனுசன் சிறந்ததொரு முன்னுதாரணம்.

சிறுவயதில் தந்தையை இழந்த போதும் தாயின் அன்பிலும் அர்ப்பணிப்பிலும் கல்வியிலுள்ள தடைகளை உடைத்தெறிந்து உயர்கல்வியில் சாதனை படைத்த மாணவனின் சாதனைப் பயணம் தொடர வாழ்த்துவதாக பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாணக் கல்விப் பணிபபாளர் ஆ.ராஜேந்திரன் தெரிவித்தார். (48)

# வட வரணிபகுதிக்கு கிடைத்தது ஒளி

வரணி வடக்குப் பகுதியினர் வடக்கின் வசந்தம் ஊடாக மின் விநியோகத்தைப் பெற்றுக்கொண்டதால் பெருமளவான பொதுமக்கள் தமது மின்சாரத்தேவையைப் பூர்த்தி செய்து வருவதைக் காணமுடிகிறது.

இப்பகுதியில் உள்ள வீதிகள், ஒழுங்கைகளுக்கு மின்சாரம் கிடைக்குமா என்ற ஏக்கப் பெருமூச்சு விட்ட மக்கள் தற்போது அப்பகுதிகளுக்கு மின் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதால் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளதுடன், தாம் மின் உபகரணங்களைப் பாவிப்பதாகவும், பாடசாலை மாணவர்களின் கல்வி கற்றல் நடவடிக்கைகள் இதனால் பெரும் நன்மை அடைந்திருப்பதாகவும் கூறுகின்றனர். இந்த வடக்கின் வசந்தத் திட்டம் தமக்கு பாரியதொரு ஒளிக்கீற்று எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.(150)

# அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வவுனியா மறவன்குளத்தில் கொஸ்லாந்தை, மீரியபெத்த மண்சரிவில் உயிரிழந்த மக்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மறவன்குளம் சனசமூக நிலைய தலைவர் மாணிக்கம் மற்றும் அப்பகுதி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு மறவன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் பெரும் திரளான மக்கள் பங்களிப்புடன் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. (90)

# சமஸ்கிருதத்துறை பேராசான் நேற்று முன்தினம் காலமானார்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறை பேராசானாக விளங்கிய பேராசிரியர் வி.சிவசாமி நேற்றுமுன்தினம் காலமானார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமஸ்கிருதத்துறையின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றியவர். 1933 ஆம் ஆண்டில் புங்குடுதீவில் பிறந்த அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தனது முதற்பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர். சமஸ்கிருதம், வரலாறு, தமிழ், இந்துப்பண்பாடு, நுண்கலைகள் எனப் பல துறைகளில் அவர் ஆளுமை பெற்றிருந்தார்.

தொல்பொருளியல் - ஓர் அறிமுகம், யாழ்ப்பாணக் காசுகள், சமஸ்கிருத நாட்டிய மஞ்சரி, பரதக்கலை, தமிழும் தமிழரும் உள்ளிட்ட 25 இற்கும் மேற்பட்ட நூல்களை அவர் ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# வெங்காயத் தலைகள் இருக்குமட்டும் வியாபாரிகளுக்கு கொண்டாட்டம்!




'ஏமாற்றாதே ஏமாறாதே...' என்றொரு பாட்டு அந்தக் காலத்தில் வந்திருந்தது.

அந்தக் காலம் என்டால், ஏதோ விக்கிரமாதித்தன் காலமோ சேர, சோழ, பாண்டியர் காலமோ அல்ல.

தமிழரசுக்கட்சியும் பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணியும் கோலோச்சிக் கொண்டிருந்த காலத்தில்.

அதிலும் தேர்தல் காலங்களில் இன்னும் இந்தப் பாட்டுக்குப் பெரிய கிராக்கி.

எல்லாக் கட்சியினரும் இந்தப் பாட்டை மாறி மாறிப் போடுவார்கள்.

எதிர்க்கட்சிகள் எல்லாம் மக்களை ஏமாற்றுகின்றன என்று சொல்வதாக இந்தப் பாட்டை தங்களுடைய கூட்டங்களில் ஒலிக்க வைப்பார்கள் தமிழரசுக்கட்சியினர்.

ஏனைய கட்சிகளோ தமிழரசுக் கட்சியே மக்களை ஏமாற்றுகிறது என்று சொல்வதாக இதைத் தங்களுடைய மேடைகளில் ஒலிப்பார்கள்.

அப்படியென்றால் உண்மையாகச் சனங்களை ஏமாற்றுவது யார்? என்ற கேள்வி சாதாரணமாகச் சிந்திக்கின்ற எவருக்கும் வரும்.

அரசியலில் சொல்வதையெல்லாம் செய்ய முடியாது என்ற யதார்த்தம் உண்டு.

ஆனால், செய்ய முடியாததையே சொல்வதை ஏற்க முடியாது. அதுதான் சுத்தமான ஏமாற்று.

தமிழரசுக் கட்சியும் அதன் வழித்தோன்றலான இன்றைய தமிழ்க்கூட்டமைப்பும் இந்த இரண்டாவது வகையில் சேர்த்தி.

நடக்க முடியாததை, செய்ய முடியாததையே இந்த அணியினர் காலம் முழுக்கச் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால், அப்படிச் சொன்னாலும் அவர்கள்தான் எப்போதும் 'கோல்' போடுகிறார்கள்.

அதாவது எப்படித்தான் மக்களை அவர்கள் ஏமாற்றினாலும் அவர்களுடைய பக்கமாகத்தான் மக்கள் நிற்கிறார்கள்.

இதில் ஏதோ ஒரு செப்படி வித்தை இருக்கிறது.

ஆச்சரியம் ஒன்றுமில்லை, இனவாத போதையைக் கலந்து மலிவாக வியாபாரம் செய்வதே இந்த வித்தை.

போதையைக் கலந்து யார் வியாபாரம் செய்தாலும் அது ஒரு மோசமான செயலே. அதைச் சிங்களவர் செய்தாலென்ன, தமிழர்கள் செய்தாலென்ன, முஸ்லிம்கள் செய்தாலென்ன?

ஏமாற்று ஏமாற்றுத்தான். மோசடி மோசடிதான்.

இந்த மோசடி நிச்சயமாக ஏமாற்றே.

ஆனால், இப்படி ஏமாற்றுகின்றவர்கள் எப்படி நீண்டகாலத்துக்கு அதைச் செய்து வெற்றியடைகிறார்கள்?

அங்கேதான் இருக்கிறது விசயம்.

ஏமாறக்கூடியவர்கள் இருக்கும் வரையில் ஏமாற்றுவோர் இருப்பார்கள். ஏமாற்றுவோரின் காட்டிலும் மழை பெய்து கொண்டேயிருக்கும்.

அப்படியென்றால், ஏமாறும் ஆட்கள் யார்? இளிச்சவாயர்கள். வெங்காயத்தலையர்கள். வெறும்வாய் சப்பிகள். உதவாக்கரைகள்.

இப்படியெல்லாம் எங்கள் சமூகத்தின் ஆட்கள் இருப்பதால்தான் தமிழர்களால் ஒரு அடி கூட முன்னோக்கி நகர முடியவில்லை.

இப்படி இருப்பதால்தான் போறவன் வாறவன் எல்லாம் தமிழர்களின் தலையில் மிளகாய் அரைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படி இருப்பதால்தான் பேயின் காலிலும் பிசாசின் காலிலும் விழுந்து கெஞ்சிக் கொண்டிருக்கிறோம்.

உலகத்திலேயே மிக நீண்ட நாட்கள் ஓடிச் சாதனை புரியும் சினிமாவாக இலங்கை இனப்பிரச்சினை கின்னஸில் இடம்பெறப் போகிறது.

அந்த மாதிரியான சண்டைக் காட்சிகள், சமாதானப் பேச்சுவார்த்தைகள், நல்லிணக்க உறவுகள், கூடிக் குலாவுகைகள், அக்கப்போஉ, எதிடீப்போஉ, உடைவுகள், சரிவுகள், நகைச் சுவைக் காட்சிகள் என்று ஏராளம் காட்சிகள்.

இதில் கதாநாயகர்கள், வில்லன்கள், துணை நடிகஉகள், குணச் சித்திரப் பாத்திரங்கள், நகைச்சுவை நடிகர்கள், துணை இயக்குநர்கள், இயக்குநர்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு.

இந்தச் சினிமாவை வைத்து நிறையப்பேர் நன்றாக உழைக்கிறார்கள்.

சிலர் தலைமுறை தலைமுறையாக உழைக்கிறார்கள்.

கோடி கோடியாக கொட்டிக்கொடுக்கிற சீதேவியாக இனப்பிரச்சினை பலருக்கு இருக்கிறது.

வாழ வைக்கும் இந்த தெய்வத்தை இவஉகள் எல்லாம் லேசில் கைவிடுவார்களா?

ஆகவே, எனக்கு நீ தம்பி உனக்கு நான் தம்பி என்ற மாதிரி ஆளுக்காள் முதுகைத் தடவிக்கொள்ள வேண்டியதுதான்.

வியாபாரத்தில் ஏட்டிக்குப் போட்டியான நிலைமை வெளிப்படையாகத் தெரியும்.

ஆனால், உள்ளே எல்லா வியாபாரிகளும் ஒருவருக்கொருவர் உள் உடன்படிக்கையில் ஒன்றாகவே இருப்பார்கள்.

இலங்கையின் அரசியல்வாதிகளில் பலரும் பல கட்சிகளும் இப்படித்தான். நீ பாதி நான் பாதி என்ற மாதிரி.

வெங்காயத்தலைகள் இருக்கு மட்டும் இந்த அரசியல் வியாபாரிகளுக்குக் கொண்டாட்டமே.

கோபம் முட்டாள்தனத்தில் துவங்கி வருத்தத்தில் முடிகிறது.
-பிதாகரஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மக்களின் வலி உணரும் தலைமை!

மக்களுக்குத் தலைமை தாங்குகிறவர்கள் மக்களின் கஷ்டங்களையும் அவர்களது வாழ்க்கைப்பாட்டின் வலிகளையும் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் அதையெல்லாம் மாற்றுவதன் அவசரத்தை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

அல்லாவிடின், அவர்கள் மக்கள் கஷ்டங்களை நீக்குவதற்கு மேலாக வேறு உணர்ச்சிகரமான கோஷங்களிலேயே தங்கள் சிரத்தையைக் காண்பிப்பார்கள். வலியை மறக்க அபின் கொடுப்பது போல மக்களது அன்றாடப்பாட்டின் வலிகளை இனரீதியான எதிர்ப்புணர்ச்சி போதையில் மறக்கடித்து வைத்துக் கொண்டு பிரச்சினையை இழுத்துச் செல்லும் கூட்டமைப்புத் தலைவர்களைப் போல.

அறுபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக, தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்ந்துவரும் தலைமையாகக் காட்டப்பட்டு வருபவர்கள், சாதாரண மக்களின் வாழ்க்கைக் கஷ்டங்களையோ தமிழர்களுக்குள்ளேயே காணப்படும் ஒடுக்குமுறைகளையோ இழிவுகளையோ பொருட்படுத்தாத ஒரு சிறு உயர்குழாத்தினரே.

இவர்கள் இனரீதியான எதிர்ப்புகளை சவால்களை முழங்கி முழங்கியே தமிழ்ச் சமூகத்தை மேலும் மேலும் சரிவில் இறக்கி வருகிறார்கள். உண்மையான, நேர்மையான தலைமைத்துவத்தை மக்களுக்கு மறைத்தும் வருகிறார்கள்.

மக்களின் கஷ்டங்களைத் தெரிந்து அதை படிப்படியாக மாற்றிவரும் தலைமைக்குத்தான் நிரந்தரத் தீர்வைக் கொண்டு வருவதன் அவசரமும் புரியும். மக்களை அவலங்களுடன் வைத்துக்கொண்டு என்றோ வரும் ஏதோ ஒரு தீர்வில் எல்லாம் மாறும் என்று கதைவிட்டுக் கொண்டிருப்பவர்கள் உண்மையில் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சொகுசு வாழ்வில் இருந்துகொண்டு தங்கள் ரோசத்துக்காக இனமேன்மைகளைப் பீற்றி வாய்வீச்சு அரசியல் செய்யும் குழாத்தினருக்கு பிரச்சினை தீரவேண்டியதன் உண்மையான அவசரம் புரியாது.

நொந்திருக்கும் மக்களுடன் நின்று அவர்களது கஷ்டங்களை மாற்ற உழைக்கும் தலைமைக்குத்தான் தீர்வின் அவசரமும் புரியும். அதை விளக்கும் ஒரு கதை:

ஒரு மலைப் பகுதியில் மலை உச்சியில் ஒரு குழுவினரும், கீழ்ப்பகுதியில் மற்றொரு குழுவினரும் வாழ்ந்து வந்தனர்.

இரு குழுவினருக்குமிடையில் தீராத பகையும் இருந்து வந்தது. ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் கீழ்ப்பகுதியைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள்.

சமூகத்திலிருந்த சில பெரியவர்கள் கூடி, மலை மேல் இருந்த குழுவினரிடம் சமாதானமாகப் போய் பேசி குழந்தையை மீட்டு வருவதற்குத் தீர்மானித்தனர்.

குழந்தையை மீட்டு வர சிலர் முன்வந்தனர். ஊர்ப்பெரியவர்களும், இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் மிகச் சிறந்தவர்கள் என்று அவர்களைத் தேர்வுசெய்து அனுப்பி வைத்தனர். விரைவில் குழந்தையைக் கொண்டுவருகிறோம் என்று அவர்கள் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. போதிய பயிற்சியில்லாததால் அந்த ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை. இருப்பினும் அவர்கள் தொடர்ந்து அப்பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர்.

அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள். அவள் அருகில் வந்தவுடன், "நாங்கள் இந்த மலையில் ஏற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நீ எப்படி செங்குத்தான மலையில் ஏறிச் சென்றாய்?" என்று வியப்புடன் கேட்டார்கள்.

அவள் தன் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி, "இது உங்கள் குழந்தை இல்லை; என் குழந்தை. அது ஒன்றுதான் வித்தியாசம்" என்று பதில் சொன்னாள். - ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."

——— லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)

# தேசிய இளைஞர் கொள்கை; புதிய பிரகடனம் அமுலாகிறது

(கொழும்பு)

"இளைஞர் எதிர்பார்ப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் சிறந்ததொரு நாடு" என்ற மஹிந்த சிந்தனை முன்னோக்கிற்கு ஏற்ப இளைஞர் தேவைகளை இனங்கண்டு இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக இலங்கையின் தேசிய இளைஞர் கொள்கை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கல்விமான்கள், அரசியல்வாதிகள், கலைஞர்கள், இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆகியோர் சகல தரப்பினரதும் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளினால் உள்ளடக்கிய இவ் தேசிய இளைஞர் கொள்கை நம்பிக்கை மற்றும் விருப்புடைய சூழலினை நிலைநாட்டல், இளைஞர் யுவதிகளின் ஆற்றல்களை விருத்தி செய்தல், இளைஞர்களை வலுவூட்டல் போன்ற விடயங்கள் 3 இனை உருவாக்குதல்.

இலங்கை தேசிய இளைஞர் கொள்கை 2014.02.14 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி தலைமையில் வெளியிடப்பட்டது. அமைச்சரவையினால் 13 ஆம் திகதி தேசிய இளைஞர் கொள்கையினை அமுல்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத் தேசிய இளைஞர் கொள்கையினை செயற்படுத்துவதன் பொருட்டு கல்வி, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி, இளைஞர் தொழிலின்மை, இளைஞர் செயற்பாடுகளை தொழில் வாண்மைக்கு உட்படுத்தல், சுகாதாரம் மற்றும் நலன்புரி, சமாதானம் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு நடவடிக்கை, கலை செயற்பாடுகள் என்ற பிரதான உபாய வழிகளின் துறை உரித்தாக செயற்படுத்தல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இச்செயற்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தற்போதைய அளவில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் கொள்கை செயற்படுத்தலினை மேற்பார்வை செய்தல், முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்ளல் மற்றும் செயற்படுத்தல் நிறுவனங்களுக்கிடையில் சிறந்ததொரு ஒழுங்கிணைப்பினை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஜனாதிபதி இளைஞர் அபிவிருத்தி ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்கு தேசிய இளைஞர் கொள்கையில் பிரேரிக்கப்பட்டுள்ளது.

1. தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் அர்த்தபுஷ்டியுடன் இளைஞர்கள் பங்குபெற்ற ஏதுவான அவர் தம் கொள்ளளவை கட்டியெழுப்புதல்.

2. இளைஞர் தொழிலாளர்கள் வலயமைப்பின் செயற்திட்டத்திற்கு இணையபொருளாதாரத்தில் இளைஞர் தம் பங்கு பற்றலை அடைதல்.

3. நாட்டினது இனம், கலாசாரம், பதம், மொழி மற்றும் வாழ்க்கை முறை ஆகிய இளைஞர்களினது பல்வகைத்தன்மையினை அங்கீகரித்து மதிப்பளிப்பதுடன் அவர்களிடயேயான சமூகபொறுப்பு மற்றும் சமூக ஒன்றிணைவு ஆகிய உணர்வுகளை பதிய வைத்தல்.

4. எல்லாவகையான ஏற்றத்தாழ்வுகளுக்கும் முகம்கொடுக்கவல்ல இளைஞர்தம் உள்ளார்ந்த இயலுமைகளை அபிவிருத்தி செய்தல்.

5. இளைஞர்தம் அபிவிருத்தி, வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான சார்பான குடும்பங்களையும சமுதாயங்களையும் அபிவிருத்தி செய்தல்.

6. இளையோரினது சுகநலம் மற்றும் நலனோம்பல் பண்புகளை முன்னேற்றல்.

7. அரசு மற்றும் அரசு சாரா துறைகளிடயே இளைஞர் அபிவிருத்தி மற்றும் அவர்தம் வேலைகள் தொடர்பானவொரு ஒன்றிணைந்த பொறுப்புணர்விற்கு வசதியளித்தல்.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அதில் தலைமைத்துவம் வகிப்பதோடு செயலாளராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் செயற்படுவார்.

# மலையகத்தில் கல்வித்துறை பின்னடைய காரணம் என்ன?

## பழிசுமத்துகிறார் திகாம்பரம்

(கொழும்பு)

அமைச்சுப் பொறுப்புகளில் இருந்த மலையகத்தை சேர்ந்த தமிழ் பிரதிநிதிகளின் செயற்பாடின்மையே மலையக கல்வி பின்னடைவுக்கான காரணம் என்று பிரதி அமைச்சர் பி.திகாம்பரம் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளு மன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின் போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தாம் பதவி ஏற்று மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை.

அமைச்சர்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதை தாம் அறிந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

மலையகத்தின் கல்வி பின்னடைவுக்கு அரசாங்கத்தை குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை.

ஆனால் அமைச்சர்களாக இருந்த மலையகத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அரசியல்வாதிகள் சரியாக செயற்படாமையே இந்த பின்னடைவுக்கு காரணம் என்று அவர் கூறினார்.

## மேலும் ஒரு சடலம் மீட்பு

மண்சரிவு ஏற்பட்ட மீரியபெத்த பகுதியில் இருந்து மற்றொரு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரால் நேற்றுக் காலை பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி 11 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் இன்னும் 19 பேர் காணாமற போயுளளதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் பிரதீப் கொடிப்பிலி மேலும் கூறியுள்ளார்.

# நவீன கேட்போர் கூடம் கண்டியில் அமைப்பு

கண்டி-பொல்கொல்லை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய புதிய கேட்போர் கூடம் எதிர் வரும் 13 ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

400 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த கேட்போர் கூடம் அதி நவீன வசதிகளுடன் கூடியதாக 1200 ஆசனங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை மற்றும் உள்ளூர் வர்த்தகம் தொடர்பான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ உட்பட கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

### இன்று பிறந்தநாள் காணும்

# தோழமையின் மகுடம் தோழர் தேவானந்தா

தொடர்ந்து 20 வருடங்கள் நாடாளுமன்றத்திலே மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக இருக்கும் பெருமைக்கு சொந்தக்காரரான ஒருவர் தனக்கான தனிப்பட்ட வாழ்வியலை துறந்து கட்சியின் ஏனைய தோழர்களுடன் தோழனாகவே தனது வாழ்க்கைப்பயணத்தை, தனதுபாணி அரசியலினூடான மக்கள் பணிகளுக்காகவே அர்ப்பணிக்கிறார் என்றால் அதுதான் சர்வதேச இடதுசாரிய விழுமியங்களினூடாக வந்த தோழமை என்னும் தாற்பரியத்திற்கு சூட்டப்படும் மகுடம்.

## கோவை.நந்தன்

நேரம் அதிகாலை 4.00 மணி, அதற்காகவே வைக்கப்பட்ட Alarm அலறுகிறது, கேட்பாரற்று அலறுகிறது, தொடர்ந்து அலறிக்கொண்டே இருக்கிறது எங்கோ ஒரு வீட்டில்.

இந்த அலுவலகத்தில் Alarm அடிக்கவேயில்லை அது வைக்கப்படவுமில்லை, அது வழமையுமில்லை. ஆனால் அங்கே ஒரு நீண்ட பலகையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அந்த மனிதர் சட்டென்று துள்ளி எழும்புகிறார். அதுதான் அங்கே அதிகாலை 4.00 மணிக்கான Alarm.

கைகளை பின்னால் மடக்கி சோம்பல் முறிக்கிறார். சில நிமிட நேரங்கள் காலைக்கடன்கள், தொடர்ந்து உடற் பயிற்சி, யோகா என்பன அவரை ஆட்கொள்ள அரவம் கேட்டு அருகில் சவகாசமாக தூங்கிக் கொண்டிருந்த ஒருவர் துள்ளி எழும்புகிறார். அவர் மற்றவர்களை எழுப்ப சிறுக, சிறுக அன்றைய தினத்து பணிகள் ஆரம்பமாகின்றன அங்கே.

அதிகாலையிலேயே ஆரம்பமாகும் அந்த அலுவலகத்துப் பணிகள் நள்ளிரவு வரை, சிலசமயம் அதனையும் தாண்டி தொடரும். அன்றைய தினம் மட்டுமல்ல கடந்த பல வருடங்களாக தினமும் இந்த விடியலை மன மகிழ்வுடன் திட்ட மிட்டு எதிர்கொள்ளும் ஒரே ஒருவர் தோழர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என்பதை எதிரியும் மறுக்கார்.

என்னைப் பொறுத்த வரையில் இலங்கையில் இரண்டே இரண்டு இடத்தில் மட்டும்தான் அதிகாலை முதல் நள்ளிரவு வரையான மக்கள் பணி ஒழுங்காக திட்டமிடப்பட்டு நடைபெறுகிறது என்பேன். ஒன்று யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. தலைமை அலுவலகம் மற்றையது கொழும்பிலுள்ள தோழர் தேவாவின் இல்லம்.

இவருக்கு இல்லம்தான் அலுவலகம் அலுவலகம்தான் இல்லம். இரண்டில் அவர் எங்கே எப்போது இருக்கிறாரோ அப்போதைய காலைகள் எல்லாம் அங்கே 4.00 மணிக்கே விடிந்துவிடும். இது அவரது திட்மிட்ட செயற்பாடு மட்டுமல்ல அவரது தோழமையின் தாற்பரியமும் இங்கே வெளிப்பட்டு நிற்கிறது..

தொடர்ந்து 20 வருடங்கள் நாடாளுமன்றத்திலே மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக இருக்கும் பெருமைக்கு சொந்தக்காரரான ஒருவர் தனக்கான தனிப்பட்ட வாழ்வியலை துறந்து கட்சியின் ஏனைய தோழர்களுடன் தோழனாகவே தனது வாழ்க்கைப் பயணத்தை, தனதுபாணி அரசியலினூடான மக்கள் பணிகளுக்காகவே அர்ப்பணிக்கிறார் என்றால் அதுதான் சர்வதேச இடதுசாரிய விழுமியங்களினூடாக வந்த தோழமை என்னும் தாற்பரியத்திற்கு சூட்டப்படும் மகுடம்.

போர்ச்சூழல் கால தேர்தல்களை தவிர்த்தாலும் 2011ஆம் ஆண்டின் ஜனநாயக கால தேர்தலில் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் மக்களின் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவான ஒரே தமிழ் பிரதிநிதி, அரசாங்கத்திலே அத்தனை அதிகாரங்களையும் கொண்ட ஒரு அமைச்சர், கட்சியின் ஏனைய தொண்டர்கள் எனப்படும் தோழர்களுடனேயே வாழ்கிறார், அவர்களுடனேயே தூங்குகிறார் (ஒரு பலகைப்படுக்கையில்), கட்சியின் அனைவர்க்குமாக தயாரிக்கப்படும் உணவையே உண்கிறார், என்கின்ற எங்குமில்லாத ஒன்றுதான் அவரை தோழமையின் உச்சிக்கே எடுத்துச் சென்று மக்கள் தலைவனாக்குகிறது.

நாகரிக வளர்ச்சியின் பின்தங்கிய காலத்தில் மலர்ந்த நேயப்பண்பு என்னும் வாழ்வியலின் அடிப்படை, உலகப் புரட்சிகளின் வரலாற்றுக்காலத் தில் பரிணாமம் பெற்று தோழமை என்னும் பதத்துடன் ஆழ் வடிவமாக்கப்பட்டது.

இன்றைய அதி நவீன நா்கரிக உல்கில் தொய்வடைந்துவரும் இந்த உன்னத உணர்வான தோழமையை, தனது வாழ்வியல் ஆக்கிக் கொண்டுள்ளமை தான் தோழர் தேவாவிற்கான மக்கள் மகுடமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மொழி, மதம், தேசம், கண்டம், சாதி, பால், இனம் என் எந்த எல்லைகளுக்கும் சிக்காமல் உள்ளுணர்வோடு சங்கமம் ஆகும் உத்தம உணர்வு இந்தத் தோழமை. துன்பம் வரும் வேளையில் கடவுளை நினைக்கிற பெருவாரியானவர்களுக்குக் கூட உடன் உதவி கேட்க நல்ல நண்பர்களைப் பற்றிய எண்ணமே அவர்களையும் அறியாமல் மனதில் உதயமாகிறது.

இதனடிப்படையில் தோழமை என்பதை ஆண்டவனின் இன்னொரு வடிவம் என்று கூட சொல்லலாம்.. அன்பை மட்டுமின்றி துன்பத்தையும் பகிர்ந்து கொள்ளும் ஆற்றல் உள்ள தோழமை உணர்வு, புரிந்து கொள்ளுதலையும், அனுசரித்தலையுமே அடிப்படையாகக் கொண்டது.

தோழர் தேவாவுடன் என்றும் எப்போதும் தோழர்கள் கூட்டம் அவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து உடன் இருக்கிறது என்றால் அனைவரையும் அனுசரித்து தோழனாக்கிக் கொள்ளும் பண்புடன் அவர் வாழ்வு அமைந்து விட்டதே காரணம் எனலாம்.

“ஒரு நல்ல நண்பன் இருந்தாலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர் ஆகி விடுவீர்கள்“, என்கிறது ஓர் ஆங்கிலப் பழமொழி. என்றும் தோழமையுடனும், தோழர்களுடனும் இருப்பது என்பது சாதாரண விடயமாகாது. பல் நோக்குச் சார்ந்த பொறுப்புடன் கூடிய ஒரு முடிவு இது. வெறும் உல்லாசத்துக்காகவும் சுய தேவைகளுக்காகவும் பேசப்படும் தோழமை எல்லாம் இதற்குள் அடங்காது அது தோழமையும் ஆகாது.

செஞ்சோற்றுக் கடனை அடைக்க சகோதரர்களுக்கே எதிராக, நண்பன் தீயவனாக அறியப்பட்டும் இறுதிவரை அவனுடனிருந்து உயிர் விட்ட உத்தம தோழன் கர்ணன் கதையை கூறுகிறது மகாபாரதம்.

கோப்பெருஞ்சோழ மன்னன் பற்றி கேள்விப்பட்டு பிசிராந்தையர் என்ற புலவர் அவன்மீது நட்புக் கொண்டார். சோழ மன்னனும் புலவர் பற்றி அறிந்து இருவரும் ஆளையாள் பார்க்காமலேயே நட்புக் கொண்டனர்.

சில ஆண்டுகள் கழித்து அவன்நாட்டு மக்களை கொடிய வறுமை வதைத்து வாட்ட, தன் நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக சோழன் வடக்கிருக்க (அன்ன ஆகாரமற்று, வேண்டுதல் நிறைவேறும் வரை இறப்பையும் ஏற்க தயாராக இறைவனை நினைத்திருப்பது) முடிவு செய்கிறான். அவனுடன் மேலும் சிலர் வடக்கிருக்க முடிவு செய்தனர். அந்தப் பந்தலில் சோழன் புலவருக்காகவும் ஓர் இடம் ஒதுக்கினான் என்றும் அது போல புலவரும் அங்கு வந்து அவர்களுடன் இணைந்து கொண்டார் என்றும் சொல்கிறது சங்ககால இலக்கியம்.

இலங்கைத்தமிழர் போராட்ட வரலாற்றிலே 1970 களில் இருந்து தோன்றிய இளைஞர் அமைப்புகளில் ஒருசில, இடதுசாரிய கோட்பாடுகளைப் பற்றியும் அதனூடான தோழமைப்பண்புகள் பற்றியும் பேச்சளவில் கொண்டிருந்தன.

1983ஆம் ஆண்டின் பின்னர் பேராட்டம் வீரியம் பெற்ற வேளை, சில இயக்கங்கள் தமது உள்ளக செயற்பாடுகளில் இடதுசாரிய பழக்கங்களையும் தோழமையையும் ஓரளவு பேணி செயற்பட்டன. அதன் தலைவர்கள் உட்பட அனைவரும் தோழர்கள் என்றே அழைக்கப்பட்டனர்.

அந்த வரிசையில் ஆரம்பத்தில் EROS எனப்பட்ட ஈழப்புரட்சி அமைப்பு, PLOT எனப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், EPRLF எனப்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்பனவற்றை முன்னிறுத்தலாம்.

குறிப்பாக EPRLF அமைப்பை வழி நடாத்திய தோழர் பத்மநாபா தோழமைக்கு வரவிலக்கணம் அமைத்து தோழர்களுடனேயே வாழ்ந்து தோழர்களுடனேயே மரணத்தையும் தழுவிய பெருமையை பெற்றவர். அந்த நாபாவின் தனித்துவமான தகமைகளாக தோழமை உணர்வு- பரோபகார சிந்தனை- மக்கள் துயர் பற்றிய கவலை என்பன இன்றும் நினைவு கூரப்படுகின்றன.

இவை அனைத்தையும் இதய சுத்தியுடன் ஏற்றுக்கொண்டவர் தோழர் தேவா ஒருவர் மட்டுமே என்பது நிசத்தினூடான நிரூபணம். தோழர் தேவாவின் சமத்துவ, சகோதரத்துவ சிந்தனைகள் எதிர்கால சமூகத்தவர் மத்தியில் வேரூன்றுமானால் நம் சமூகமும் விருட்சமாய் வளரும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

நம்மவர் மத்தியில் புரையோடிய சாதிய, சமூக ஏற்றத் தாழ்வுகளின் வீரியம் ஓரளவு குறைந்துள்ளதாக கூறப்பட்டாலும் இன்னமும் இது தொடர்கதையாவதும் இதனைக் குறித்துக்காட்டும் விதத்தில் பல புறக்கணிப்புகள், வார்த்தைப் பிரயோகங்கள் ஏன் சாதியகலவரங்கள் கூட இன்னமும் இருப்பதும் எமது வரலாற்று சாபக்கேடு.

(18ஆம் பக்கம் பார்க்க)





# இந்தியாவுடன் உறவை வலுப்படுத்த பிரதமர் விருப்பம்

## இந்திய பல்கலைக்கழகத்தில் உரை



(கொழும்பு)

இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள விரும்புவதாக பிரதமர் டி.எம் ஜயரட்ன தெரிவீத்துள்ளார். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் மிக நீண்ட காலமாக உறவுகள் பேணப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் மணிப்பால் பல்கலைக்கழக்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ராமாயண காலம் முதல் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் உறவுகள் பேணப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மணிப்பால் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில், பிரதமரின் புதல்வியும் பட்டம் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவுடன் "தேன்நிலவு" ஆரோக்கிய அரசியல் அல்ல

## பிரான்ஸ் தூதுவர் சொல்கிறார்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் சீனாவுடன் மட்டும் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவது ஆரோக்கியமாகாது என பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுவதாக இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜேன் பொல் மொனச்சுவா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அனைத்து முட்டைகளையும் சீனா என்ற ஒரே கூடையில் நிரப்புவது புத்திசாதுரியமாகாது என அவர் தெரிவித்துள்ளார்.



ஏனைய உலக நாடுகளுடனும் இலங்கை சுமூகமான உறவுகளைப் பேண வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அண்மைக்காலமாக அதிக எண்ணிக்கையிலானவர்கள் சீனாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் இலங்கைப் பேணி வரும் உறவுகள் குறித்து பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்பி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். உலகில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துச்செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் சீனாவை மையப்படுத்திய கொள்கைகளை மாற்றிக் கொண்டு, ஏனைய நாடுகளுடனும் உறவுகளைப் பேண நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, பிரான்ஸுடன் இலங்கை சிறந்த உறவுளைப் பேணி வருவதாக தெரிவித்துள்ளார்.

# அகதிகளை பாதுகாக்க தவறிவிட்டது ஆஸி

## குவிகிறது கண்டனக் கணைகள்

புகலிடக் கோரிக்கையாளர்களை அவுஸ்ரேலியா பாதுகாக்கத் தவறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மனித உரிமை அமைப்புக்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் கூட்டாக இணைந்து இந்த குற்றச் சாட்டை முன்வைத்துள்ளன.

புகலிடம் வழங்கப்படக் கூடிய நியாயமான இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களைக் கூட அவுஸ்ரேலியா பாதுகாக்கத் தவறியுள்ளது என தெரிவித்துள்ளன.

அவுஸ்ரேலிய அரசாங்கம் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் களை பாதுகாக்கத் தவறியுள்ளமை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் சித்திர வதைகளுக்கு எதிரான கமிட்டியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

77 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இந்த அறிக்கையை பகுதி அளவிலும் முழு அளவிலும் ஏற்றுக் கொண்டு கையொப்பமிட்டுள்ளன. சித்திரவதைகளுக்கு எதிரான கமிட்டியின் கொள்கைகளுக்கு புறம்பான வகையில் அவுஸ்ரேலியா செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2013ம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, சித்திரவதைகளுக்கு எதிரான கொள்கைளை அவுஸ்ரேலியா பின்பற்றி வருவதாகவும் சில சந்தர்ப்பங்களில் சில சூழ்நிலைகளில் தவிர்க்க முடியாத வகையில் சில சில விடயங்கள் இடம்பெறுவதாகவும் அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்பொட் தெரிவித்திருந்தார் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் சித்திரவதைகளுக்கு எதிராக 100 வீத கொள்கை பின்பற்றப் படவில்லை என்பது புலனாகியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகு மூலம் அவுஸ்ரேலியாவை சென்றடையும் 50 வீதமான இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்ற போதிலும் அரசாங்கம் அவ்வாறு ஏற்றுக்கொள்வதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

# படகு அகதிகள் விவகாரம் கொள்கையில் மாற்றம் இல்லை

## அவுஸ்ரேலியா திட்டவட்டம்



(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்களுடன் அவுஸ்ரேலியா நோக்கி வரும் படகுகளைத் திருப்பி அனுப்புதல் என்ற கொள்கையில் இருந்து ரொனி அபொட் தலைமையிலான அரசாங்கம் விலகாது என அவுஸ்ரேலியாவின் குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிசன் தெரிவித்துள்ளார.

நேற்று முன்தினம் நியூ சவூத் வேல்ஸ மாநிலத்தில் லிபரல் கட்சியின் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசிய போதே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார். படகுகள் வருவதை நிறுத்த முடியாது எனக் கூறியவர்களின் விமர்சனங்கள் முன்னிலையில் தளராதிருந்தமை குறித்து அவர் கூட்டணி அரசாங்கத்தை வரவேற்றார்.

இந்த வருடம் ஒரேயொரு படகு மாத்திரம் வந்ததால், அத்தகைய கொள்கைகளில் இருந்து விலகிச் சென்று, அதனைக் கைவிட வேண்டுமென சிலர் கருதுகின்றனர் என்றும் ஸ்கொட் மொறிசன் குறிப்பிட்டார்.

எமது கொள்கைகளை ஆட்சேபிப்பவர்கள், நாம் பாதுகாப்பை கைவிட வேண்டும் என்பதைத் தவிர வேறெந்த எண்ணத்தையும் கொண்டிருக்கவில்லை எனவும் அவர்குறற்ம் சாட்டினார்.

# பிடிபட்டது தங்கக்கடத்தல்

(கொழும்பு)

சட்ட விரோதமாக இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட 6 கோடி ருபாய் பெறுமதியான தங்கம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டது.

சிங்கப்பூரில் இருந்து வந்த வத்தளை பகுதியைச் சேர்ந்த தம்பதிகளால் இந்த தங்கம் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதித்தேர்தலில் மகிந்த போட்டி அரசியலமைப்பு சட்ட வியாக்கியானம்

## இன்று வெளிவர வாய்ப்பு


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு குறித்து, உயர் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விளக்கம் கோரல் சம்பந்தமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள இரண்டு விடயங்கள் குறித்து இன்னமும் பதில் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து பெரும பாலும் இன்றைய தினம் உயர் நீதிமன்றத்தின் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சங்கதின் செயலாளர் சட்டத்தரணி அஜித் பத்திரன தெரிவித்துள்ளார்.

18ஆவது திருத்தச் சட்த்தின் கீழ் தம்மால் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்பிருக்கிறதா? என்பது தொடர்பில் ஜனாதிபதி மகிந்தராஜபகஷ உயர் நீதிமன்றத்தில் விளக்கம் கோரியுள்ளார்.

இதன் சட்ட விளக்கத்தை இன்றைய தினத்துக்கு முன்னதாக தமக்கு தெரிவிக்குமாறு ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தில் கோரியுள்ளதாக, உயர்நீதிமன்றத்தின் பதிவாளரால் சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எவ்வாறாயினும், மூன்றாவது தவணைக்கு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ போட்டியிடுவது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் சட்டவிளக்கம் அழுத்தமானதாக அமையாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கடந்த ஆறாம் திகதி தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் ஜே வி பியும் இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# ஜனாதிபதி தலைமையில் நாலாந்தா பாதயாத்திரை



நாலந்தா கல்லூரி நிறுவப்பட்டதன் 90ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட நாலந்தா பாதயாத்திரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையில் நேற்று நடைபெற்றது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன- அமைச்சர்களான- நிமால் சிறிபால டி சில்வா- ராஜித்த சேனாரத்ன- பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி- பிரதி அமைச்சர் சரத் வீரசேக்கர- நாடாளுமன்ற உறுப்பினர்கள் திலங்க சுமதிபால- மற்றும் கல்லூரியின் அதிபர் கர்னல் ரஞ்சித் ஜயசுந்தர ஆகியோர் இதில் கலந்துகொணடனர். இம்மாதம் முதலாம் திகதியு டன் நாலந்தா கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 90 வருடம் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஏழைகளின் தோழன்! ஏதிலிகளின் காவலன்!! வடக்கின் விடிவெள்ளி!!!

ஈழத் தமிழரின் வேதனை போக்குவதற்கான 35 வருடகால தமிழர் விடுதலை அரசியலில்...


25 வருட கால பாராளுமன்ற அரசியல் - 20 வருட கால அமைச்சர் பதவி ஊடான சேவைகள் கடந்து...

# 57 ஆவது அகவை காணும்

# தோழர் டக்ளஸ் தேவானந்தா

[அமைச்சர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் ஊக்குவிப்பு அமைச்சு]





இந்த நன்னாளில்...

நாம் ஒவ்வொருவரும்...

கட்சி அரசியல் பேதம், சாதி, சமய, வகுப்பு பேதங்கள் கடந்து

எம் அயலில் வாழும் நாமறிந்த துன்பப்பட்ட மக்களின் துயர் துடைக்க

எம்மாலான ஏதும் பணிகள் செய்து

60 வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் மற்றும் ஆயுத முரண்பாடுகளால் பாதிப்புற்ற

எம் தேசத்து மக்களின் துயர் துடைக்கும் இந்த மகத்தான தலைவனின் பணிகளுக்கு

தோள் கொடுப்போம்!

**பசித்திருப்போருக்கு உணவு!**

**ஆடையற்றவருக்கு புதிய ஆடை!!**

**வீடற்றவனுக்கு ஒரு வாழ்விடம்!!!**

# யாழ். மத்தியில் சிறப்புற நடைபெற்ற அஞ்சலோட்ட கானிவேல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை வீர,வீராங்கனைகளுக்கிடையில் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் முதன் முறையாக நடாத்திய அஞ்சலோட்டக் கானிவேல் நேற்று சிறப்புற நடைபெற்றது.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற இப்போட்டி 14, 16, 18 ஆகிய வயதுப் பிரிவு வீரா, வீராங்கனைகளுக்கிடையில் நடைபெற்றது. இதில் 4X100, 4X400 மற்றும் கலப்பு அஞ்சலோட்டப் போட்டிகள் நடைபெற்றன.

4X100 மீற்றர் போட்டியின் 14 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

16 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முதலாமிடத்தையும், மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

18 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முதலாமிடத்தையும் மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

4X100 மீற்றர் போட்டியின் 14 வயது ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாமிடத்தையும் சென். ஜோண்ஸ் கல்லூரி இரண்டாமிடத்தையும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

16 வயதுப் பிரிவுக்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாமிழத்தையும், சென். ஜோண்ஸ் கல்லூரி இரண்டாமிடத்தையும் யாழ். மத்திய கல்லூரி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டள.

18 வயதுப் பிரிவு போட்டியில் யாழ். மத்திய கல்லூரி முதலாமிடத்தையும் சென். பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாமிடத்தையும், மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

20 வயதுப் பிரிவுக்கான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி முதலாமிடத்தையும் வேலணை மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

பெண்களுக்கான திறந்த போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தையும் பாடுமீன் விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும் யாழ். பல்கலைக்கழகம் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

ஆண்களுக்கான திறந்த போட்டியில் யுத்காமஸ் விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தையும் யாழ். பல்கலைக்கழகம் இரண்டாமிடத்தையும் கலைவாணி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் வெற்றியீட்டிய அணிகளுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

(எஸ்.பி., 93,12)



## களத்திற்கு வெளியில்....

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடருக்கு பாகிஸ்தான் அணியின் கப்டன் பதவிக்கு மிஸ்பாவே பொருத்தமானவர். அவர்தான் கப்டன் பதவிக்கு சிறந்த தேர்வு. டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியின் சிறந்த கப்டனாக செயற்பட்டு வரும் அவரையே உலக கிண்ணத் தொடருக்கான கப்டன் பதவியில் நீடிக்க வைக்க வேண்டும்.

**அப்ரிடி (பாகிஸ்தான் வீரர்)**

உலகக் கிண்ண ஒரு நாள் போட்டிக்கு முன்பு இந்திய அணி அவுஸ்ரேலியாவுடன் விளையாடுகிறது. இந்த பயணம் இந்தியாவின் உலக கிண்ண வாய்ப்பை முடிவு செய்யும். டெஸ்ட் தொடரிலும், ஒருநாள் தொடரிலும் சிறப்பாக ஆடினால் மட்டுமே இந்தியாவுக்கு உலக கோப்பையை தக்க வைத்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். அவுஸ்ரேலியா, நியூசிலாந்து அணிகள் சொந்த மண்ணில் சிறப்பாக விளையாடும் என்பதால் உலக கோப்பை வாய்ப்பு அதிகமாக உள்ளது.

**ஸ்ரீபன் பிளமிங் (நியூசிலாந்து)**

உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டு, உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடருக்கு முன் இந்திய அணியில் இடம் பெற முயற்சிப்பேன். இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடி வருவது ஆரோக்கியமான விடயம்.

**பதான் (இந்தியா சகலதுறை வீரர்)**

## முதல் சுற்று சமநிலை




(சோச்சி)

ஆனந்த், கார்ல்சன் மோதிய உலக சதுரங்க சம்பியன்ஷிப் முதல் சுற்றுப் போட்டி, சுமார் ஐந்தரை மணி நேர போராட்டத்துக்குப் பின் சமநிலையானது.

உலக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டி, ரஷ்யாவின் சோச்சி நகரில் நடைபெற்று வருகின்றது. இதில் மொத்தம் 12 சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில், ஐந்து முறை (2000, 2007, 2008, 2010, 2012) உலக சம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், நடப்பு சம்பியன் நோர்வேயின் கார்ல்சனை சந்திக்கிறார்.

இதன் முதல் சுற்று நேற்று முன்தினம் நடைபெற்றது. வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய ஆனந்த், ராணிக்கு முன் இருக்கும் சிப்பாயை நகர்த்தி போட்டியை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இருந்தே தாக்குதல் ஆட்டத்தில் இறங்கிய ஆனந்த், 7ஆவது நகர்த்தலில் மந்திரியை வைத்து, கார்ல்சன் குதிரையை காலி செய்தார். 25, 26ஆவது நகர்த்தல்களில் இருவருக்கும், ஒரு யானை வீழ்ந்தது. முதல் சுற்று, ஐந்தரை மணி நேரம் நீடித்தது. 48ஆவது நகர்த்தலின் போது, போட்டியை சமநிலை செய்ய இரு வீரர்களும் சம்மதித்தனர். இதையடுத்து முதல் சுற்றின் முடிவில், இரு வீரர்களும் தலா 0.5 புள்ளி பெற்றனர்.



## நெய்மரின் லீலைகள்

காதலி சொர்ஜாவை அழைத்து வர தனி "ஜெட்' விமானத்தை அனுப்பி அசத்தினார் பிரேசில் வீரர் நெய்மர்.

பிரேசில் கால்பந்து நட்சத்திரம் நெய்மர், களத்தில் மட்டுமல்ல, காதல் விளையாட்டிலும் அசத்தி வருகி-றார். சமீபத்தில் சொந்த மண்ணில் நடைபெற்ற உலக கோப்பை தொடரில், காயம் காரணமாக காலிறுதியுடன் வெளியேறினார்.

அப்போது இவருடன் பிரேசில் நடிகை புருனா மார்குயிஜின் (வயது19) என்ற பெண், 'தோழியாக' இருந்தார். கடந்த ஆகஸ்ட், மாதம் இருவரும் ஸ்பெயி-னின் இபிஜா என்ற தீவுக்கு சென்றனர்.

இருவருக்கும் என்ன பிரச்சினை ஏற்பட்டது எனத் தெரியவில்லை. நெய்மர் புருனாவை பிரிந்தார். இங்கு வைத்து, தன்னை விட 6 வயது மூத்தவரான செர்பிய அழகி சொரஜாவை, (வயது-28) நெய்மர் சந்தித்துள்ளார்.

பிக் பிரதர் என்ற ஷோவில் நடித்த சொரஜாவுக்கு என்று கிழக்கு ஐரோப்பாவில் தனி இரசிகர்கள் பட்டாளமே உள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்துக்குப் பின் இருவரும் சந்திக்கவே இல்லை.

அதேநேரம் இணையத்தளத்தின் உதவியால் தங்களது நட்பினை வளர்த்து வந்தார் நெய்மர். தற்போது பார்சிலோனா அணிக்காக விளையாடி வரும் இவரைச் சந்திக்க விரும்பிய சொரஜா, விமானத்தில் செல்ல டிக்கெட்டுகள் வாங்கி ரெடியாக இருந்தார்.

ஆனால், நெய்மருக்கு பொறுமையாக இருக்க முடியவில்லை. உடனடியாக சொரஜா இருக்கும் இடத்துக்கு தனி ஜெட் விமானத்தை அனுப்பினார். இதனால், தனது விமான டிக்கெட்டுகளை திருப்பிக் கொடுத்து விட்டு, தனி ஜெட்டில் வந்திறங்கினார்.

விமானத்தில் எடுத்த படங்களை தனது இன்ஸ்டாகிராம் இணையதளத்தில் வெளியிட்டு பரபரப்பை கிளப்பினார். இதில் நெய்மர் அணியும் பார்சிலோனா ஜெர்சி அணிந்து கவர்ச்சியாக காணப்பட்டார்.

## முர்ரேயிற்கு பாராட்டு

ரென்னிஸ் வீரர் ஆண்டி முர்ரே தனது பயிற்சியாளராக மௌரிஸ்மோவை நியமித்ததற்கு பர்டோலி பாராட்டு தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் ரென்னிஸ் நட்சத்திரம் ஆண்டி முர்ரே, தரவரிசையில் 6ஆவது இடத்திலுள்ள இவர், கடந்த லண்டன் ஒலிம்பிக்கில் (2012) தங்கம் வென்றார். கடந்த பிரெஞ் ஓப்பன் அரையிறுதியில் ஸ்பெயினின் நடாலிடம் வீழ்ந்தார். இதன்பின், முன்னாள் பிரான்ஸ் வீராங்கனை அமிலி மௌரிஸ்மோவை தனது பயிற்சியாளராக நியமித்தார். தரவரிசையில் முன்னிலையிலுள்ள ஒருவர், பெண் பயிற்சியாளரை நியமிப்பது இதுவே முதன்முறை.

இது குறித்து பிரான்சின் முன்னாள் வீராங்கனை பர்டோலி கூறியது: ரென்னிஸில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு முற்றிலும் மாறுபட்டது. வீரர் ஒருவருக்கு பயிற்சியாளராக மாற, அதிகமான விடயங்கள் தெரிய வேண்டும். பெண் ஒருவரை பயிற்சியாளராக நியமித்த முர்ரேவின் செயல் பாராட்டுக்குரியது.

இதை மற்ற வீரர்களும் பின்பற்ற வேண்டும். பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வீராங்கனைக்கு இப்பணி கடினமானது தான். ஆண்டு முழுவதும் போட்டிக்காக பல இடங்களுக்கு பயணம் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்றார்.

# மானிப்பாய் ஏஞ்சலின் கூடைப்பந்து இறுதி ஆட்டங்கள் இன்று

(மானிப்பாய்)

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையினால் நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டங்கள் இன்று மாலை 3.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஆண், பெண் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன.

பெண்கள் பிரிவின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி வீராங்கனைகள் சிறப்பாகச் செயற்பட்டு புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை வீராங்கனைகள் செயற்பட்டபோதிலும் அதன் முயற்சி கொக்குவில் இந்துக் கல்லூரியினால் முறியடிக்கப்பட்டது. நிறைவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 29-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய உடுவில் மகளிர் கல்லூரி அணி 36-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து பெண்கள் பிரிவில் மூன்றாமிடத்திற்கான போட்டி நடைபெற்றது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி 20-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இதேவேளை, பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் இன்று மாலை பலப்பரீட்சை நடாத்தவுள்ளன.

16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டதுடன் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 46-40 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை நீலம் அணி மற்றும் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் மருன் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் நீலம் அணி 36-30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டி இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் மருன் அணியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதவுள்ள அதேவேளை, மாலை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (93)



# இன்று தடகளம்

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதி நாள் போட்டி நாளை இடம்பெறவுள்ளது.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி கடந்த 07 ஆம் திகதி முதல் நுவரெலியா பொது விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இதில் அரச பாடசாலை ஆசிரியர்கள், கல்வி நிர்வாக அலுவலர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் ஆசிரிய கலாசாலை மாணவர்கள், பிரிவேனா மாணவர்கள் பங்குபற்றி வருகின்றனர்.

கடந்த 07ஆம் திகதி நடைபெற்ற பெண்கள் வலைப்பந்து மற்றும் ஆண்கள் கரப்பந்து ஆகிய போட்டிகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மூன்றாம் இடத்தைப் பிடித்து அசத்தியது.

இதேவேளை மெய்வல்லுநர் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளதுடன் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48,90)

# இலவச உடற்பயிற்சி நிலையம் கொழும்பில் திறப்பு

## ஆரோக்கியத்தைப் பேண அரிய வாய்ப்பு



(கொழும்பு)

கொழும்பு சுதந்திர சதுக்கத்தை அண்மித்த திறந்த வெளியில் உடற்பயிற்சி நிலையமொன்று (ஜிம்) பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தில் பொதுமக்கள் பயிற்சிகளை இலவசமாக செய்துகொள்ள முடியும்.

உடல் மற்றும் உள நலனை மேம்படுத்துவதன் மூலம் செயலூக்க சமுதாயத்தை உருவாக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தூரநோக்கு சிந்தனைக்கு அமைய உடற்தகுதி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ வைபவரீதியாக இந்த உடற்பயிற்சி நிலையத்தை திறந்துவைத்தார்.

டி எஸ் ஐ நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் தேகாரோக்கியம் மற்றும் அதற்கு அப்பால் என்பதை தொனிப் பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த உடற்தகுதி நிலையத்தில் இலவசமாக உடற் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.

இந்த நிலையத்தினுள் குறை பார பளு தூக்குதல், ஸ்ப்ரிங் உபகரணங்களினால் கரப் பயிற்சி, கால் பயிற்சி, உடற் பயிற்சி ஆகியவற்றை செய்து கொள்ள முடியும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கு அமைய அனைத்து மக்களும் தேகாரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்ற நன்னோக்குடன் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக நிலையத்தை திறந்துவைத்து கருத்து வெளியிட்ட பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்த பாதுகாப்பு செயலாளர் ஒவ்வொரு உடற்பயிற்சி உபகரணங்களைக் கொண்டும் சிறுபயிற்சிகளில் ஈடுபட்டார். இந்த நிலையத்திற்கு சற்று அப்பாலும் உடற்பயிற்சிக்கான மூன்று இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றிலும் பொதுமக்கள் பயிற்சிகளை இலவசமாக செய்துகொள்ள முடியும்.



யாழ். இந்துக் கல்லூரியின் அவுஸ்திரேலியா வாழ் பழைய மாணவன் சு.சுபா சுபாகரனினால் யாழ் இந்துக் கல்லூரியின் கிரிக்கெட் அணிக்கு 38,000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டபோது...

# விளையாட்டு செய்திகள்

## அதிக கோல் மெஸ்சி சாதனை

(பாரிஸ்)

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் அசத்திய பார்சிலோனா அணியின் மெஸ்சி அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையை சமன் செய்தார்.

ஐரோப்பாவில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது.

பாரிசில் நடைபெற்ற லீக் போட்டியில் பார்சிலோனா, அஜக்ஸ் அணிகள் மோதின. இதன் முதல் பாதியில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி 36ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இரண்டாவது பாதியிலும் அசத்திய மெஸ்சி (76ஆவது நிமிடம்) மீண்டும் ஒரு கோல் அடித்து அணியை வலுப்படுத்தினார்.

எதிரணியால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. முடிவில், பார்சிலோனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ரவுண்ட்-16 சுற்றுக்கு முன்னேறியது.

இதன் மூலம், சம்பியன்ஸ் லீக் தொடரில் இதுவரை 71 கோல் அடித்துள்ள மெஸ்சி, இத்தொடரில் அதிக கோல் அடித்த ஸ்பெயின் வீரர் கன்சாலஸ் (ரியல் மட்ரிட், 71) சாதனையை, சமன் செய்தார்.

சாதனையை சமன் செய்தமை குறித்து கருத்துத் தெரிவித்த மெஸ்சி, அணியின் வெற்றி எனது முதல் இலக்கு. அணிக்காக சிறப்பாக விளையாடும் போது சாதனைகள் தானாக வரும். இதில் எனக்கு உடன்பாடு கிடையாது. என்னை நம்பியிருக்கும் அணிக்காக எப்பொழுது சிறப்பாக ஆடி வெற்றி தேடிக் கொடுப்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றேன். அணி வெற்றிபெறும் போது நான் மகிழ்வேன் என்றார்.

# கோழி கூரை மீதேறிக் கூவினாலும் அதன் சொந்த இடம் குப்பை மேடுதான்!



இன்றைய நாட்களில் இலங்கைத் தமிழ் ஊடகங்களில் அடிக்கடி அடிபடும் ஒரு பெயர் மனோ கணேசன் உடையதாகும். அவரது பெயர் ஊடகங்களில் அடிக்கடி இடம்பெறும் அளவுக்கு வேறொரு தமிழ் தலைவரின் பெயரும் அடிபடுவதைக் காண முடியாது. அதற்குக் காரணம் மனிசனின் சலியாத உழைப்புத்தான்.

அதாவது தினசரி வேலை மெனக்கிட்டு (தனது வியாபார முயற்சிகளுக்கிடையிலும்) இருந்து, ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றி அறிக்கை எழுதி ஊடகங்களுக்கு அனுப்பாமல் மனிசன் சாப்பிடவோ, தூங்கவோ போகமாட்டார் போல இருக்கிறது.

அவரது அறிக்கைகளில் நிச்சயமாக சிவாஜி கணேசன் "மனோகரா" படத்தில் பேசும் ஆக்ரோசமான வசனங்களில் கிளம்பும் அனல் கட்டாயமாக இருக்கும். அத்துடன் இன்னொன்றும் இருக்கும். அதாவது வசைபாடல்.

அவரது பெரும்பாலான அறிக்கைகள் இன்றைய அரசாங்கத்தையும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் வசை பாடுவதாக இருந்த போதிலும், அவற்றை "கொமடி"யாக எடுப்பதாலோ என்னவோ, மகிந்த ராஜபக்ஷ வருடா வருடம் கணேசனுக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கத் தவறுவதில்லை.

அதற்கான காரணத்துக்கு அவரது சகோதரரும், மகிந்தவின் அரசில் பிரதி அமைச்சராகவும் இருக்கும் பிரபா கணேசன் ஒரு விளக்கத்தைத் தெரிவித் திருந்தார்.

அதாவது மனோகணேசன் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும், தமிழ் இனவாதத்தைத் தூண்டும் விதமாகவும் விடும் அறிக்கைகளை, சில சிங்களப் பத்திரிகைகள் வரிக்கு வரி மொழிபெயர்த்து தமது பத்திரிகைகளில் வெளியிடுவதால், அதை வாசிக்கும் சாதாரண சிங்கள மக்கள் மேலும் மேலும் மகிந்தவின் பக்கம் போய்ச் சேருவதற்கு மனோ கணேசன் உதவுகிறார் என்றும், அதனால்தான் அதற்கு நன்றிக் கடனாக வருடா-வருடம் மகிந்த அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்கிறார் என்றும் அவர் கூறுகிறார்.

இப்படியெல்லாம் சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து தமிழ் மக்களுக்குச் சார்பாக மனோ கணேசன் ஆவேசமான அறிக்கைகளை அடிக்கடி விடுத்தாலும், அவரது உண்மையான விசுவாசமும், இருப்பிடமும் ஐ.தே.க ஆகவே இருக்கிறது. தேர்தல் வரும் சமயங்களில் இதைக் காணலாம்.

அண்மையில் நடைபெற்ற ஊவா மாகாணசபைத் தேர்தலிலும் ஐ.தே.க மேடைகளில் எவ்விதக் கூச்சநாச்சமும் இன்றி ஏறி நின்று கூவி இருக்கிறார். தயக்கமின்றி அவர் மேற்கொள்ளும் இந்த இரட்டை வேடத்துக்குக் காரணம், மக்கள் மறதிக் குணம் உள்ளவர்கள், மடையர்கள் என்று கருதுவதுதான்.

ஏனெனில், மனோ கணேசன் கொழும்பில் ஒரு வியாபாரியாக வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்தாலும், அவரும் ஒரு இந்திய வம்சாவழித் தமிழர்தான். இந்திய வம்சாவழித் தமிழ் மக்களின் வாக்குரிமையையும், பிரஜா உரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது, அவர் வழிபடும் ஐ.தே.க தான் என்பதை அவர் அறியாமல் இருக்க முடியாது.

அதேபோல, தமிழ் மக்களின் மீது காலத்துக்குக்காலம் இனவன்செயல்களை சிங்களக் காடையர்கள் நடாத்தி வந்ததிற்கு அவர்களைத் தூண்டிவிட்டதும், ஐ.தே.க ஆட்சிக் காலங்களில்தான் என்பதும் அவருக்குத் தெரியாததல்ல.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், சந்திரிகாவின் 2000 ஆண்டுத் தீர்வுத் திட்டம் என்பன போன்ற பெறுமதி வாய்ந்த அதிகாரப் பகிர்வு தீர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவிடாமல் குழப்பியதும், மனோ கணேசன் வால் பிடிக்கும் ஐ.தே.க தான். இப்படி எத்தனையோ சொல்லிக்கொண்டு போகலாம்.

இருந்தும் பிடிவாதமாகவும், தொடர்ச்சியாகவும் மனோ கணேசன், இலங்கையில் இருக்கின்ற கட்சிகளில் மிக மோசமான சிங்களப் பேரினவாதக் கட்சியான ஐ.தே.க. மீதே தனது விசுவாசத்தைக் காட்டி வருகிறார்.

இவ்வளவு எல்லாம் செய்த ஐ.தே.க தமிழர்களுக்கும், அவர்களில் ஒரு பகுதியினரான மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நன்மை செய்யும் என்றும் மனோ கணேசன் கூறுகிறாரென்றால், ஒரு பக்கத்தில் மக்களுக்கு அஞ்சாத அவரது துணிச்சலையும்,

மறுபக்கத்தில் அவரை நம்பி ஆதரிக்கிற தமிழர்களில் ஒரு பகுதியினரின் முட்டாள் தனத்தையும்தான், அது பறைசாற்றி நிற்கிறது.

— வானவில் 45 இதழ் -

# கே.வி. மகாதேவன்



26

- பி.ஜி.எஸ்.மணியன் -

"எல்லாம் உனக்காக" - நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், நடிகையர் திலகம் சாவித்திரியும் நடித்த படம். பி. புல்லையா இயக்கி இருந்தார். கண்ணதாசன், மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், கு.மா. பாலசுப்ரமணியம், கொத்தமங்கலம் சுப்பு ஆகியோர் பாடல்களை எழுதி இருந்தனர்.

ஆனால் "பாசமலர்" படத்தில் அண்ணன் தங்கையாகப் பார்த்த சிவாஜி கணேசனையும் சாவித்திரியையும் இந்தப் படத்தில் கணவன் மனைவியாக ரசிகர்கள் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்த காரணத்தால் படம் வந்த வேகத்திலேயே சுருண்டுபோனது.

என்றாலும் பாடல்களில் "கொஞ்சி வரும் நெஞ்சில் இந்தக் கோபம் என்னடா" சுசீலாவின் இனிமை பொங்கும் குரலில் அமைந்த பாடல் சிலோன் வானொலியின் புண்ணியத்தால் அறுபதுகளின் இறுதிவரை நம் செவிகளை நிறைத்துக்கொண்டிருந்தது.

ஏ.கே. வேலனின் இயக்கத்தில் எஸ்.எஸ். ஆர் நடிப்பில் வெளிவந்த படம் "பணம் பந்தியிலே". கவிஞர் கா.மு. ஷெரீப் எழுதிய

"பணம் பந்தியிலே குணம் குப்பையிலே - இதைப்பார்த்து அறிந்து நடக்காதவன் மனிதனில்லே.

பிழைக்கும் மனிதனில்லே." - சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் அற்புதமாக வடிவமைத்துக் கொடுத்திருந்தார் கே.வி.மகாதேவன்.

ஆனாலும், இப்படி இசை அமைத்த படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அடி வாங்கிக் கொண்டே இருந்தால் எப்பேர்ப்பட்ட ஜாம்பவானும் ஒரு பெரிய சரிவைச் சந்திக்க நேரிடும்.

அப்படி ஒரு சரிவைச் சந்திக்க நேரிடாமல் கே.வி. மகாதேவனைக் காப்பாற்றியது மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் வெளிவந்த அடுத்த படம்.

கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் கதை வசனத்தில் ஏ.சுப்பாராவ் இயக்கத்தில் இந்தப் படம் மகத்தான வெற்றிப்படமாக அமைந்து விட்டது.

அந்த நாட்களில் குறைந்த செலவில் படம் எடுக்க விரும்பும் தயாரிப்பாளர்கள் ஒப்பந்தம் செய்யும் நடிகராக எஸ்.எஸ். ராஜேந்திரன் இருந்துவந்தார். அவருடன் விஜயகுமாரி, எம்.ஆர். ராதா, சௌகார் ஜானகி, எஸ்.வி. ரங்கராவ் நடித்திருந்தனர்.

அனைத்துப் பாடல்களுமே சூப்பர் டூப்பர் ஹிட் பாடல்களாக அமைந்து மகாதேவனை முந்தைய படத்தின் தோல்விகளால் பாதிப்படைய விடாமல் செய்துவிட்டன.

அந்தப் படம்தான் "குமுதம்".

ஒரு முக்கியமான தகவல். படத்தின் இயக்குனர் ஏ. சுப்பாராவ் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய விதம் பற்றிக் குறிப்பிடும்போது கே.வி. மகாதேவன் இப்படிச் சொல்கிறார்:

"இவர் படத்துக்கு காதல் டூயட் போடு, சோகப்பாட்டு போடு என்று சொல்லமாட்டார். காட்சிகளை விவரிப்பார். "இந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றமாதிரி ஒரு மெட்டைப் போடுங்கள்" என்பார். டியூனைக் கொடுத்ததும் ஓகே செய்துவிடுவார். இது சரியில்லை வேறு டியூன் போடுங்கள் என்பதை எல்லாம் இவரிடம் காணவே முடியாது."

கொடுக்கும் முதல் மெட்டு எதுவோ அதுவே ஏற்றுக்கொள்ளப்பட்டுவிடும்.

இப்படி இருக்கும் பட்சத்தில் முதல் மெட்டையே சிறப்பாகக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் ஒரு இசை அமைப்பாளர் எவ்வளவு கவனமாகச் செயற்பட வேண்டியதிருக்கும்.




இந்த நிலையை லாவகமாகக் கையாள்வதில் தனித்திறமை பெற்றிருந்தார் கே.வி.எம்.

"குமுதம்" படத்தில் இடம்பெற்ற இன்றளவும் நம் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்ற அனைத்துப் பாடல்களுமே முதல் டியூனிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடல்கள் தான்.

பி. சுசீலாவின் தேன்குரலில் "கல்யாணம் ஆனவரே சௌக்யமா" ஒரு குறும்பு தெறிக்கும் பாடல் என்றால் மருதகாசியின் அருமையான காதல் டூயட் "என்னை விட்டு ஓடிப்போக முடியுமா?" பாடலோ என்னதான் முயன்றாலும் நம் மனசை விட்டு ஓடிப்போக மறுக்கிறதே!

சீர்காழி கோவிந்தராஜன் - பி.சுசீலா பாடிய இந்தப் பாடலில் பல்லவியிலும் முதல் சரணத்திலும் சுத்த தன்யாசி ராகத்தைக் கையாண்டு இசை அமைத்த கே.வி. மகாதேவன் "மணமாலை சூ[illegible]" என்ற இறுதிச் சரணத்தின் துவக்கத்திலேயே பாடலில் நடைபேதம் செய்து ராகத்தையும் மாற்றி "ஆபேரி"க்கு தாவி கடைசியில் சுசீலாவின் ஹம்மிங்கோடு மறுபடியும் சுத்த தன்யாசிக்கு மாறி... அப்பப்பா.. ரசவாதம் தான் செய்திருக்கிறார்.

இன்று வரை "குமுதம்" என்று பெயர் சொன்னாலே மறுகணமே நம் நாக்கு உச்சரிக்கத் தொடங்கி விடும் பாடலைப் பற்றிச் சொல்லாவிட்டால் எப்படி?

"மாமா மாமா மாமா" - டி.எம். சௌந்தரராஜனும், ஜமுனாராணியும் பாடி இருக்கும் இந்த ஜனரஞ்சகப்பாடல் - இந்தக் காலப் பாஷையில் சொல்லவேண்டும் என்றால் செம குத்துப்பாடல்.

சிவரஞ்சனி ராகத்தை லாவகமாக இவ்வளவு எளிமைப்படுத்திக் கொடுத்து பட்டி தொட்டி எல்லாம் பரவவிட்ட மகாதேவனின் மகத்தான திறமை சிலிர்க்கத்தான் வைக்கிறது.

டி.எம்.எஸ். - ஜமுனா ராணியின் குரல்களில் தெறிக்கும் போதை...

தபேலா, வயலின், ஹார்மோனியம் ஆகிய மூன்றே மூன்று இசைக்கருவிகளை வைத்துக்கொண்டு இப்படி ஒரு பாடலை எப்படி மகாதேவனால் கொடுக்க முடிந்தது என்று பிரமிக்க வைக்கிறது பாடல்.

மழலைக்குரல் எம்.எஸ். ராஜேஸ்வரியின் குரலில் "மியாவ் மியாவ் பூனைக்குட்டி". இது ஒரு குழந்தைப் பாடல் அல்ல. படத்தில் இரண்டாவது கதாநாயகியாக வரும் சௌகார் ஜானகிக்கு அந்தப் பாடல்.

உவமைக் கவிஞர் சுரதாவின் கற்பனையில் மாமல்லபுரத்துச் சிற்பக் கலையின் மகத்துவத்தைச் சொல்லும் "கல்லிலே கலை வண்ணம் கண்டான் - இரு கண்பார்வை மறைந்தாலும் காணும் வகை செய்தான்" - சீர்காழி கோவிந்தராஜனின் வெங்கலக் குரலில் ஒரு மகத்தான பாடல். ஜோன்புரி ராகத்தின் அடிப்படையில் கொடுத்திருக்கிறார்.

இப்படி அனைத்துத் தரப்பு ரசிகர்களையும் கவரும் வண்ணம் "குமுதம்" படப் பாடல்கள் அமைந்து படத்தை மகத்தான வெற்றிப் படமாக்கி விட்டன.


(தொடரும்)

# சட்டக் கல்வி

– அ.மார்க்ஸ் –

சட்டக் கல்வி என்பது வழக்குரைஞர்களுக்கானது மட்டுமல்ல. சட்டத்தின் ஆட்சி, அரசியல் சட்ட ஆளுகை என்றெல்லாம் பேசப்படும் ஒரு ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு சட்டக் கல்வி அளிக்கப்பட வேண்டும்.

இது முழுமையாக ஒரு அரசியல் சட்ட ஆளுகை நடைபெறும் நாடு என நான்



சொல்ல வரவில்லை. அரசியல் சட்ட ஆளுகை இல்லை என்பதையே கூடப் புரிந்து கொள்வதற்கு நமக்கு சட்டக் கல்வியின் அடிப்படைகள் தேவை.

சட்டக் கல்வி என்பது சட்டபூர்வமாக வழ்வதற்கும், சட்ட ரீதியாக நமது உரிமைகளைக் கோருவதற்கும் மட்டுமல்ல; ஒரு வழக்குரைஞரைப் போல பிரச்சினைகளை அணுகும் முறை ஒவ்வொருவருக்கும் தேவை.

ஏனெனில் யோசித்துப் பார்த்தால் நாம் எல்லோருமே எப்போதும் ஏதேனும் ஒரு வழக்கை உரைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். இப்போது நான் உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன் என்றால் நான் என் வழக்கை (case) உங்களிடம் உரைத்துக் கொண்டுள்ளேன்.

"பேச்சு" / "செயல்" இரண்டையும் வேறுபடுத்தி நாம் அவற்றை எதிர் எதிராக நிறுத்திப் பார்க்கிறோம். ஆனால் உண்மையில் அது அப்படியல்ல. பேச்சும் ஒரு செயல்தான். நாம் பேசும்போது எதிரே உள்ளவரிடம் ஒரு மாற்றத்தை விளைவிக்கிறோம். அதாவது அவர் மீது ஒரு செயலைப் புரிகிறோம்.

ஆக, நாம் எல்லோருமே எப்போதுமே ஏதேனும் ஒரு வழக்கை உரைத்துக் கொண்டிருக்கிறோம் என்கிற போது நாம் ஒவ்வொருவரும் வழக்குரைஞரின் அணுகல்முறையைக் கைவரப் பெற்றவராக இருக்க வேண்டும் என்றாகிறது.

அதென்ன "வழக்குரை அணுகல் முறை"? வேறொன்றுமில்லை. எது குறித்தும் இரண்டு (அல்லது அதற்கும் மேற்பட்ட) arguments இருக்கும் என்பதை ஏற்பதுதான். நாம் ஒரு argument - ஐ முன் வைக்கும்போது, அந்தப் பிரச்சினை குறித்து அந்த ஒரு argument மட்டுமே இருப்பதாக நினைத்துக் கொள்கிறோம். ஆனால் ஒரு வழக்குரைஞர் அப்படி நினைப்பதில்லை. அப்படி நினைத்தால் அவர் ஒரு நல்ல வழக்குரைஞர் இல்லை.

நமது argument இற்கு ஒரு counter argument இருக்கும் என ஏற்பதும், அதை எவ்வாறு நாம் சமநிலைப்படுத்துவது என யோசிப்பதும், அவ்வாறே செயல்படுவதற்குமான பயிற்சியை நாம் பெறுவது அவசியம். அதற்கு சட்டக் கல்வி முக்கியம்.

காந்தி, அம்பேத்கர் உட்பட உலகின் மிகச் சிறந்த அரசியல் செயலாளிகள் பலரும் சட்டம் பயின்றவர்கள் என்பது நினைவிற்குரியது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர்கள் 44 பேர்களில் 25 பேர் சட்டம் பயின்றவர்கள்.

சட்டம் பயிலுதல் என்பது உள்ள சட்டங்களை முழுமையாகப் பயில்வது மட்டுமல்ல. "சட்டங்கள் எதுவும் முழுமையானது அல்ல. அவை குறைபாடுடையவையே" எனப் புரிந்து கொள்வதும், அந்தக் குறைபாடுகளைக் குறைப்பதற்கு என்ன வழி என யோசிக்க வைப்பதுமே சரியான சட்டக் கல்வி.

ஆம். சட்டங்கள் அனைத்தும் குறைபாடுகள் உடையவை; இந்தச் சட்டங்களின் அடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்புகளும் குறைபாடுடையவை என்கிற புரிதல் நமக்குத் தேவை. நீதித் துறையில் செயல்படுபவர்களுக்கு இன்னும் அதிகமாகத் தேவை.

இந்தக் குறைபாடுகள் சமூக அளவில் பேசப்படும்போது, விவாதத்திற்குள்ளாக்கப்படும்போது, போராடப்படும்போது, சமூக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அற ஒழுங்கில் (Normative Order) ஒரு கிழிசல் (rupture) ஏற்படுகிறது, இது மிக வலுவாக அமையும்போது சட்ட ஒழுங்கிலும் (legal order) மாற்றம் ஏற்படுகிறது. இது இரண்டு வகைகளில் ஏற்படுகிறது.

1. சமூக அளவில் கொந்தளிப்பு அதிகமாகும்போது அரசே (சட்ட மன்றங்களே) புதிய சட்டங்களை இயற்றுகின்றது; அரசு முன்கை எடுக்கும் நிலை இல்லாதபோது, சில நேரங்களில் நீதி வழங்கும் விசாலமான மனம் படைத்த சில நீதியரசர்களின் மூலம் புதிய நீதி வழங்கு நெறிமுறைகள் (judicially evolved principles) உருவாகின்றன.

இரண்டிற்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டு: 1973இல் மாதுரி எனும் ஒரு பழங்குடிப் பெண் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட நிகழ்வில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அந்தப் பெண்ணின் "ஒழுக்கம்" பற்றிப் பேசி உரிய நீதி வழங்காது போகிறது. ஒரு பெரிய அளவில் இந்தத் தீர்ப்பு விவாதிக்கப்பட்டு பெண்கள் இயக்கங்களால் போராட்டங்கள், கண்டனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதை ஒட்டி பாலியல் வன்முறை (rape) தொடர்பான புதிய சட்டம் உருவாக்கப்பட்டது. rape, consensual sex முதலியன குறித்துப் புதிய வரையறைகள் பெண்ணிய நோக்கில் முன் நகர்த்தப்படுகின்றன.

2013 டெல்லி பாலியல் வன்முறையை (நிர்பயா) ஒட்டி ஏற்பட்ட எழுச்சியைத் தொடர்ந்து இன்று பாலியல் வன்முறை தொடர்பாக இன்னும் இறுக்கமான சட்ட நெறி முறைகள் உருவாகியுள்ளன.


2. நீதிமன்றத் தீர்ப்புகளின் ஊடாக உருவாகியுள்ள புதிய நெறிமுறைகளுக்கு (judicially evolved principles) ஒரு எடுத்துக்காட்டு இன்று அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்க வேண்டும் என்கிற புதிய நடைமுறை.

ஆகச் சட்டங்கள் குறைபாடுடையவை, அவற்றின் வழி உருவாக்கப்படும் தீர்ப்புகளும் குறைபாடுடையவை என்கிற புரிதலும், உணர்வும் நமக்குத் தேவை.

புதிய சூழல்கள் சில புதிய துறைகளில், புதிய சட்டங்களை உருவாக்கும் தேவைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன.

cyber crimes, bio ethics, intellectual property rights, surrogacy related rights, migration related rights முதலிய துறைகளில் இன்று புதிய சட்டங்கள் உருவாகியுள்ளன.

சட்டக் கல்வி என்பது இவ்வகையில் புதிய சவால்களைச் சமாளிக்கக் கூடியனவாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சட்டக் கல்வி என்பது முக்கியமானது மட்டுமல்ல, புதிய சவால்களை எதிர் நோக்கியுள்ளதும் கூட.





# MS Office Word உதவிக்குறிப்புகள்

டேபிளை நகர்த்தும் வழி: வேர்ட் டொகுமெண்ட்டில் அமைக்கப்படும் டேபிள்களை எளிதாக, மொத்தமாக இன்னொரு இடத்திற்கு நகர்த்தி அமைக்கலாம். எப்படி டொகுமெண்ட்டில் உள்ள கிராபிக்ஸ் படங்களை நகர்த்துகிறோமோ, அதே போல, டேபிளையும் நகர்த்தலாம்.

இதற்கு, டேபிள் உள்ளாக, கேர்சரை நிலை நிறுத்தவும். கிளிக் செய்திட வேண்டாம். அங்கு கர்சரை நிறுத்தினால் போதும். இப்போது, டேபிளின் இடது மேல் மூலையில், ஒரு சிறிய ஐகொன் தோன்றும். இது சிறிய சதுரம் ஒன்றில், நான்கு திசையிலும் அமைக்கப்பட்டிருக்கும் அம்புக் குறிகளைக் கொண்டிருக்கும். இந்த ஐகொன் மீது கிளிக் செய்து, அப்படியே இழுத்தால், டேபிளை முழுமையாக இழுத்துச் செல்லலாம். நீங்கள் விருப்பப்படும் இடத்தில் கொண்டு போய், டேபிளை அமைக்கலாம்.

டொகுமெண்ட்டில் பயணம்: டொகுமெண்ட் ஒன்றைத் திறந்து பல இடங்களில் எடிட் செய்து கொண்டிருக்கிறீர்களா? இடையே ஓய்வு எடுத்து மீண்டும் வருகையில், இறுதியாக எங்கு எடிட் செய்தோம் என்று தெரியவில்லையா? கவலையே வேண்டாம். Shift+F5 கீகளை அழுத்துங்கள். இறுதியாக எடிட் செய்த இடத்திற்குச் செல்லலாம். தொடர்ந்து அடுத்தடுத்து அழுத்தினால், அடுத்தடுத்து பின்னோக்கி எடிட் செய்த இடத்திற்குச் செல்லலாம்.

டொகுமெண்ட்டின் இடையே பிரிக்க: வேர்ட் புரோகிராமில் உருவாக்கப்படும் டொகுமெண்ட்டில், பலவகையான இடைவெளிகளை (breaks) உருவாக்கலாம். நாம் தொடர்ந்து டொகுமெண்ட் ஒன்றில் டைப் செய்கையில், வேர்ட் நாம் ஒரு




பக்கத்தின் எந்த இடத்தில் டைப் செய்து கொண்டிருக்கிறோம் என்பதனைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் முழுமையானவுடன், தானாக அடுத்த பக்கத்தினை உருவாக்கி, நாம் டைப் செய்வதனை தொடர்ந்து மேற்கொள்ள உதவுகிறது. டொகுமெண்ட் Normal வியூவில் இருந்தால், இந்த இடைவெளி சிறிய இடைக்கோடாகக் காட்டப்படும். ஆனால், இது அச்சிடப்பட மாட்டாது. ஆனால், சில வேளைகளில், பக்கம் இறுதிவரை செல்லாத போதும், அந்த பக்கத்தினை முடித்து, அடுத்த பக்கம் செல்ல விரும்புவோம். இதற்கு நாமே பேஜ் பிரேக் அமைத்திட, வேர்ட் வழிகளைத் தருகிறது. வேர்ட் தரும் வேறு சில பிரேக் வசதிகளையும் இங்கு காணலாம்.

1. Page break: தொடரும் டெக்ஸ்ட்டினை அடுத்த புதிய பக்கத்தில் அமைத்திட இது உதவும்.

2. Column break: தொடர்ந்து டைப் செய்திடும் டெக்ஸ்ட்டை, அடுத்த நெட்டு பத்தியில் முதல் வரியில் அமைத்திட இதனைப் பயன்படுத்தலாம்.

3. Section break: நம் டொகுமெண்ட்டில், புதியதொரு பிரிவில் டெக்ஸ்ட் அமைத்திட இந்த பிரேக் உதவும். இதில் நான்கு வகை Section break உள்ளன.

4. Text-wrapping break: இது ஏறத்தாழ லைன் பிரேக் போல அமையும். இது டெக்ஸ்ட்டினைப் பிரித்து அடுத்த வரியில் புதிய டெக்ஸ்ட் அமைக்க உதவும். பொதுவாக கிராபிக்ஸ் கலந்து டெக்ஸ்ட் அமைக்கும்போது, அதனைச் சுற்றி அமைக்கப்படும் டெக்ஸ்ட் பிரித்து சரியாக அமைக்க இது உதவும்.

5. நீங்கள் வேர்ட் 2007 பயன்படுத்துபவராக இருந்தால், பிரேக் அமைக்க கீழ்க்காணும் வழிகளைப் பின்பற்றவும்.

6. எந்த இடத்தில் பிரேக் அமைக்க விரும்புகிறீர்களோ, அந்த இடத்தில் கேர்சரை அமைக்கவும்.


7. ரிப்பனில் Page Layout தேர்ந்தெடுக்கவும்.

8. Page Setup குரூப்பில் Breaks டூலின் மீது கிளிக் செய்திடவும். இங்கு வேர்ட் பலவகையான பிரேக் அமைத்திட ஒரு பட்டியலைத் தரும். எந்த வகை பிரேக் அமைக்க வேண்டுமோ, அதனைத் தேர்ந்தெடுத்து கிளிக் செய்திடவும்.






வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற மலர் கண்காட்சி நிகழ்வை பார்வையாளர்கள் பார்வையிடுவதைக் காணலாம்.





# நிகழ்வுகளின் பதிவுகள்....

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்திய மாதாந்த முழுநிலா கருத்தாடல் நிகழ்வு அண்மையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் கழகத்தில் அண்மையில் நடைபெற்றபோது... (11)


பருத்தித்துறை -கொழும்புக்கான அச்சுவேலியூடான பேருந்து சேவை அண்மையில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டபோது... (85)


யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது... (எஸ்.பி.)







சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவின்போது... (பா)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த பூநகரியில் உதவிகள்

## வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் கையளித்தார்




கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவில் பல கிராமங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வாழ்வாதாரத்திற்கான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் இந்த வாழ்வாதார உதவிகளை பயனாளிகளிடம் வழங்கி வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தவிசாளருமான முருகேசு சந்திரகுமாரின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழும், உலக உணவு விவசாய அமைப்பின் நிதி ஒதுக்கீட்டின் கீழும் பெறப்பட்ட வாழ்வாதார உதவிகளே வழங்கி வைக்கப்பட்டன.

அந்த வகையில் பூநகரி மற்றும் முட்கொம்பன் பிரதேசங்களை சேர்ந்த 11 பயனாளிகளுக்கு நல்லின கறவை மாடுகளும், தெளிகரை பிரதேசத்தை சேர்ந்த 20 பயனாளிகளுக்கு தூவல் முறை நீர்ப்பாசன இயந்திர தொகுதிகள், முற்கம்பி, பசளை, நிலக்கடலை என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், பூநகரி பிரதேச சபை உறுப்பினர்களான இராசலிங்கம், குகேந்திரன், தெளிகரை பதில் கிராம அலுவலர் தமிழினி, கமக்கார அமைப்பின் தலைவர் செல்வம், முட்கொம்பன் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் தேவாஜினி, கிராம அலுவலர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜயகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# புயல் மழைக்கு பின்னான பொழுது கவிதை நூல் வெளியீட்டு விழா



கவிஞர் த.ஜெயசீலனின் 'புயல் மழைக்குப் பின்னான பொழுது' என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொருளாளருமாகிய ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ். இலக்கிய வட்டத்தின் செயலர் நயினை கி.கிருபானந்தாவும் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கனும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதியும் யாழ். தமிழ்ச்சங்கத்தின் தலைவருமாகிய பேராசிரியர் தி.வேல்நம்பியும் நூல் நயப்புரைகளை பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோரும் வழங்கினர்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் தி.வேல்நம்பி வெளியிட்டு வைக்க கௌரவப் பிரதியை கவிஞர் இயக்கச்சி சி.கருணாகரனும், கலாபூஷணம் செ.குமாரசாமியும் பெற்றுக்கொண்டனர். சிறப்புப் பிரதிகளை கவிஞரின் நண்பர்களும் இலக்கிய ஆர்வலர்களும் பெற்றுக்கொண்டனர்.

கனவுகளின் எல்லை, கைகளுக்குள் சிக்காத காற்று, எழுதாத ஒரு கவிதை என்ற வரிசையில் இந்நூல் கவிஞர் த.ஜெயசீலனின் நான்காவது கவிதைத் தொகுதி ஆகும்.

இவர் பருத்தித்துறை பிரதேச செயலராக பணியாற்றுகிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (90)

# ஐக்கிய நாணய சங்கத்துக்கு 112 கதிரைகள் அன்பளிப்பு

ஏழாலை மேற்கு ஐக்கிய நாணய சங்கத்திற்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான 112 கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை 05.30 மணி முதல் சங்கத்தின் தலைவர் மகாதேவன் தலைமையில் நடைபெற் றது. வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2014 ஆம் ஆண்டுக்கான வடமாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதியிலிருந்து இக் கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந் நிகழ்வில் யாழ்.மாவட்டக் கூட்டறவு ஆணையாளர் க.அருந்த வராஜன் மற்றும் ஆசிரியர் பிருந்தாபன், சங்க உறுப்பினர்கள், ஊர்ப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (48)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

விமான நிலையத்தில் விமானத்திற்கு பொருட்கள் பெக்கிங் பகுதி கிச்சன் உதவியாளர்கள் ஸ்ரீ லங்கன் கேட்டரிங் மற்றும் டுவரிஸ் தங்கும் ஹோட்டல்களுக்கு அனுபவமுள்ளவர்களாயின் வசதிகள் தந்து மேலதிக சம்பளம் தரப்படும் 18-50 ஆண், பெண் தேவை 0373970039, 0372299116 கண்டி வீதி, மாவத்தகம.

---

0779282876 ரூ 35,000 க்கு மேல் வருமானம், சிங்களம் அவசியமில்லை. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, பலாங்கொடை கொழும்பு) ஜேம், கோடியல், பிஸ்கட், கிளவுஸ், பால்மா, டொபி Etc... தொழிற்சாலைகளில் உற்பத்தி, பொதியிடல், லேபல் பிரிவில் வேலைவாய்ப்புக்கள் பல. வயது 18 55 ஆண் பெண் தேவை. உணவு, தங்குமிடத்துடன் குழுக்கள், நண்பர்கள் ஒரே நிறுவனத்தில் தொடர்புக்கு 0779958889, 0779282876, 0774457980.

---

வவுனியாவில் அமைந்துள்ள பிரபல தொலைத் தொடர்பாடல் நிறுவனத்தில் SIM விற்பனைக்கு Sales துறையில் முன்அனுபவமுள்ள, அனுபவமற்ற ஆண், பெண் இருபாலாரும் தேவை. தொடர்புகளுக்கு 0789977777 உடன் தொடர்பு கொள்ளவும்.

---

வவுனியாவில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்திற்கு A/L படித்த Clerk தேவை. முன்பள்ளி ஆசிரியரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புக்கு 0766602970.

---

இலங்கை முழுவதும் உள்ள இரத்தினபுரி அவிசாவளை, கேகாலை, கண்டி ஹட்டன், எம்லிபிடிய, பதுளை, பண்டாரவளை, குருணாகல், அனுராதபுரம், வவுனியா, மற்றும் கொழும்பு, அம்பாந்தோட்டை கப்பல் துறைமுகம், கனரக மென்ரக, சாரதிகள் மற்றும் கையுதவியாளர் உடனடியாக அவசியம் (கன்டயினர், டிப்பர், லேலன், லொரி, 6.'.10 வீல் பவுசர், முச்சக்கர வண்டி பைக், கார், வேன்) வயது 18-55 வரை பெறலாம் சம்பளம் 18,000- 55.000 வரை பெறலாம். உணவு, தங்குமிடம் உண்டு. தொடர்புகளுக்கு 0770734757.

---

உங்கள் வாழ்க்கையை வளப்படுத்த எங்களுடன் கைகோருங்கள் தொழிலின்படி 15,000-25,000 - 38,000 வரையிலான சம்பளம். கண்டி கம்பளை, பொல்கொல்ல, குருணாகலை மற்றும் கொழும்பு சுற்றுப் பகுதிகளில் உள்ள ஜேம், பிஸ்கட் டொபி, சொக்லெட், கிளவுஸ், ஆடைபோன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல் பொதியிடல் பிரிவுகளுக்கு வயது 17-50) ஆண், பெண் அவசியம். உணவு தங்குமிடம் சகாய விலையில் தம்பதியினர், நண்பர்கள் குழுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவர். வருகை தரும் நாளிலேயே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் உடனே தொடர்புகொள்ளுங்கள் 0774567082.

# மும்மொழிக் கற்கை நிலையத்தின் சிங்களக் கற்கை பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியங்காடு டச்சு வீதியில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் நடாத்தப்படும மும்மொழிக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் சிங்களக் கற்கைப் பயிலரங்கு நேற்றும், நேற்று முன்தினமும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றது.

மும்மொழிக் கற்கை நிலைய இயக்குநர் லிலானி அமரசிங்க தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைத்தார்.

சிங்களக் கற்கைப் பயிலரங்கின் வளவாளர்களாக தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் விராஜித் கமகே, கிராகம, பிலிமத்தலாவ ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் டபிள்யு கருணாதிலக்க, பதுளை மாவட்ட சிங்கள பாட ஆசிரியர் விஜயகாந்த் ஆகியோர் பங்கு கொண்டுள்ளனர்.



இப்பயிலரங்கு எதிர்வரும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களப் பரீட்சை ஆகியவற்றிற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (90,48)

# கைவிடப்படும் நிலையில் கொஸ்லாந்தை மீட்புப்பணி

(கொழும்பு)

கொஸ்லாந்தையில் மீட்புப் பணிகள் மேற்கொள்வதில் தொடர்ந்தும் பெரும் சிரமங்கள் காணப்படுவதால் மீட்புப் பணிகளை கைவிடும் நிலை தோன்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளையில் மீட்புப் பணிகளுக்கு பாதிக்கப்பட்ட பிரதேசத் தைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து போதிய அளவில் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை அத்துடன் அதிக ஆழத்தில் இடிபாடுகளும், காணாமல் போயிருப்பவர்களும் புதையுண்டிருப்பதுடன், சடலங்கள் உருக்குலைந்திருப்பதனால் தேடுதல் நடத்துவதில் பயனில்லை என்ற கருத்தும் மக்கள் மத்தியில் நிலவுவதாக மீட்புப் பணிகளுக்கு பொறுப்பான மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தெரிவித்துள்ளார்.

''பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் உதவிக்கு வந்திருந்தார்கள். அவர்களின் உதவியோடு இரண்டு சடலங்களைக் கண்டுபிடித்தோம். அதேநேரத்தில் சுமார் 100 அடி ஆழத்தில் புதையுண்டிருக்கின்ற இடிபாடுகளையும் உருக்குலைந்துள்ள சடலங்களையும் மீட்பதற்காக தேடுதல் நடத்துவதில் பயனில்லை என்றும் அவர்கள் உணர்கின்றார்கள்'' என்றார் மனோ பெரேரா.



இதேவேளை, பொதுமக்கள் தேடுதல் நடவடிக்கைகளில் இராணுவத்திற்கு உதவி செய்வதற்கும், அவர்களுடன் ஒத்துழைப்பதற்கும் தயாராக இருக்கின்ற போதிலும் இராணுவம் சரியான முறையில் பொதுமக்களின் உதவியை நாடவில்லை என்று கொஸ்லாந்தையைச் சேர்ந்த சமூக சேவையாளரும், ஹல்துமுல்ல பிரதேச சபை உறுப்பினருமாகிய செல்வரட்னம் சிறிகாந்தன் கூறுகின்றார்.

''நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தில எங்கு வீடுகள் இருந்தன, எங்கு கோவில் இருந்தது எங்கு மக்கள் அதிகமாக வசித்தார்கள். இடிபாடுகள் கூடிய இடம் எது என்பவற்றை அந்தப் பகுதியில் வசித்தவர்களே நன்கறிவார்கள். இடைத் தங்கல் முகாமில் இளைஞர்கள் காலையில் இருந்து வேலையற்றவர்களாகவே இருக்கின்றார்கள். காணாமற் போயிருப்பவர்கள் 38 பேரில் இதுவரையில் 11 சடலங்களையே கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

இவற்றில் 7 சடலங்கள் பொதுமக்களின் உதவியுடனேயே கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. காணாமற் போயிருப்பவர்களின் சடலங்களைக் கண்டுபிடித்து இறுதிக் கிரியைகளைச் செய்ய வேண்டும். எதிர்கால நன்மைகளுக்காகவும் நட்ட ஈடு உட்பட்ட கொடுப்பனவுகளுக்காகவும் அவர்களு டைய மரணங்கள் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதைப் பொதுமக்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள்'' என்றார் ஹல்துமுல்லை பிரதேச சபை உறுப்பினரும் சமூக சேவையாளருமாகிய செல்வரட்ணம் சிறிகாந்தன்.

# ஜனவரி முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல்

## இது பிந்திய தகவல்

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசரின் விஜயத்தை கருத்தில் கொண்டு ஜனாதிபதி தேர்தலை ஜனவரி 2 ஆம் திகதி நடாத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாப்பரசரின் விஜயத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்க்கு வசதியாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும்,அது வத்திக்கானை திருப்திப்படுத்தும் என அரசாங்கம எதிர்பார்ப்பதாகவும் தெரியவருகின்றது.

ஜோதிடர்களின் ஆலோசனையைத் தொடர்ந்து முன்னர் ஜனவரி 8 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சூதாட்ட நிலையம் சுற்றி வளைப்பு

வென்னப்புவ - உல்கிடியாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த சூதாட்ட நிலையம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது சூதாட்டத்தில் ஈடுபட்ட 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் சிலர் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் சந்தேகநபர்களின் 8 மோட்டார் சைக்கிள் மற்றும் மூன்று சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# வடமத்திய மாகாணத்தில் இன்று வரவு செலவுத்திட்டம்

வடமத்திய மாகாண சபையின் 3ஆவது வரவு செலவு திட்ட அறிக்கை இன்று முற்பகல் 10.00 மணிக்கு சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடமத்திய மாகாண சபையின் நிதி அமைச்சரான முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் சமரக்கோன் 2015ஆம் ஆண்டுக்கான இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார். இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கை மீதான விவாதமும் இன்றைய தினமே நடைபெறவுள்ளது.


# அகவை 57 இல் எம் தலைவர்



மக்களுக்கு குரல் கொடுப்பவர்
உறவுக்கு கை கொடுப்பவர் நீங்களே
மக்கள் நெஞ்சில் நீங்காத இடம்
பிடித்தவர்
அவரே எங்கள் தலைவர்
யாழில் ஒளியேற்றி
மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டி
யாழ்தேவியை எமக்களித்த
உங்களுக்கு எம்மால் தரமுடிந்தது
எங்கள் இதயம் கனிந்த பிறந்தநாள்
வாழ்த்துக்கள்
வாழ்க பல்லாண்டு.

தோழர்கள்,
ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி,
யாழ்ப்பாணம்.

குடாநாட்டின் எழுச்சிக்கு இன்று
பிறந்த நாள்
மக்கள் நெஞ்சத்தின் மகிழ்ச்சிக்கு இன்று
பிறந்த நாள்
மக்களாட்சி வாழ்வித்த உயர்ச்சிக்கு இன்று
பிறந்த நாள்
உழைப்புக்குப் பொருள் கூறும் உணர்ச்சிக்கு இன்று
பிறந்த நாள்
கள்ளங் கபடமற்ற கண்ணியத்தின்
பிறந்தநாள்
பொற்காலம் படைக்கின்ற புண்ணியத்தின்
பிறந்தநாள்
அயலாரும் நேசிக்கும் அன்புக்குப்
பிறந்த நாள்!
கற்றலின் வழி செல்லும் அறிவுக்கு
பிறந்தநாள்
தமிழ் இனத்தின் ஆயுளை நீட்டிக்கும்
தன்நிகரில்லா நல்தலைவனுக்கு
பிறந்தநாள்!

தலைவி–திருமதி புனிதஜோதி பாஸ்கர்
செயலாளர்–திருமதி. சாந்தி மலர் ஜெயபாஸ்கர்
கண்ணாபுர மாதர் அபிவிருத்தி சங்கம்
யாழ்ப்பாணம்.


# இந்துமத பீடம் ஆசிச்செய்தி



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் 57 ஆவது பிறந்த தினத்தை (10.11.2014) முன்னிட்டு ஜனாதிபதியின் இந்துமத அலுவல்கள் விவகார இணைப்பாளரும் சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளருமான ஆன பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா அவர்கள் அமைச்சர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களையும் அவரது நீண்ட ஆயுளுக்கு ஆசிகளையும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கான சேவைகளை குறிப்பாக வடக்கு வாழ் தமிழ் மக்களுக்கு அர்ப்பணிப் புடன் செயற்பட்டு வரும் அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் எனவும் பாபுசர்மா தெரிவித்துள்ளார்.

12) பின்வரும் சொற்களுக்கான பொருளை இணைத்துக்காட்டுக

| | |
|---|---|
| 1) அறம் | 1) அரிதல் |
| 2) அரம் | 2) பாதி |
| 3) அறை | 3) தருமம் |
| 4) அரை | 4) கற்றுக்கொள் |
| 5) அறி | 5) கூராக்கும் கருவி |
| 6) இறக்கம் | 6) வீட்டின் பகுதி |
| 7) இரக்கம் | 7) சரிவு |
| 8) அரி | 8) மனவுருக்கம் |
| 9) ஊன் | 9) உணவு |
| 10) ஊண் | 10) இறைச்சி |

**13) பந்தியை வாசித்து இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.**

**ஓர் ஊரில் ஒரு ------------------------------------------------------------- (அம்மா, பாட்டி) இருந்தார்.**

**அவர் ஒரு --------------- (துண்டியில், வேப்பமரத்தடியில்) வடை சுட்டு விற்று வந்தார். ஒரு நாள் ஒரு --**

**------------------------------------------------------------------------**

**(கிளி, காகம், நரி) அந்த மரத்தில் வந்து அமர்ந்தது. வடையின் ------------------------ (நாற்றம், வாசம்)**

**காகத்தின் ---------------------------------------------------------- (கண்ணை, மூக்கைத்) துளைத்தது.**

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்



## தரம் 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

1 மணி



**01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

தேனிருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டுபோல
சீனியுள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்புபோல

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியைப்போல
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்

**1) வண்டு எதனைத் தேடி மொய்க்கிறது? ----------------------------------------**

**2) பாடலில் இடம்பெற்றுள்ள பிராணிகள் எவை? ----------------------------------------**

**3) வளம் நிறைந்த நாட்டிலே வந்து நிலைப்பவர் யாவர்? ----------------------------------------**

**4) கனி என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக ----------------------------------------**

**5) குறைந்த என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.----------------------------------------**

**6) பழம் எனும் சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுக ----------------------------------------**

**02) எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களை எழுதுக.**

1) த், தி, ரி, கை, ள், க, ப ------------------------------
2) ழ, ங், ப, ள், க ------------------------------
3) மை, ப், ச, போ, ம் ------------------------------
4) ழ், வோ, ம், ம, கி ------------------------------
5) லை, தொ, சி, பே ------------------------------

**03) பின்வரும் சொற்களுக்குள் வேறுபட்ட சொல்லை இனங்கண்டு எழுதுக**

1) வந்தேன், பாடினேன், அழுதான், சிரித்தேன்
2) ஓடியது, துள்ளியது, கூவியது, குதித்தன
3) மேசை, கதிரை, குடல், அலுமாரி
4) கத்தி, கோடரி, மண்வெட்டி, மேசன்கரண்டி
5) ஓவியன், அன்னை, புலவன், சிற்பி

**04) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.**

1) வானம் கறுத்தால் ................ பெய்யும்
மழை பெய்தால் ................ குளிரும்
................ குளிர்ந்தால் புல் தழைக்கும்
புல் தழைத்தால் ................ மேயும்

பசு மேய்ந்தால் பால் ................
பால் சுரந்தால் ................ குடிக்கும்
கன்று ................ மிஞ்சிதைக்
................ கொண்டு வந்திடலாம்.

**05) பின்வரும் வாக்கியத்தை உறுப்பமைய பார்த்து எழுதுக.**

1) மரங்கள் வளர்ப்போம் பயன் பல பெறுவோம்


2) ................

3) ................

4) ................

5) ................

**06) குறுக்கெழுத்துப் புதிர்களை நிரப்புக.**



1. சூழல் பசுமையானது
2. நேரம் பார்க்க உதவும்
3. வனம் என்பதன் ஒத்தகருத்து
4. பாம்பின் வகை ஒன்று
5. வெட்டக்கூடியது

**07) நல்ல பழக்கங்கள் என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு ஒத்தகருத்துச் சொற்களை தருக.**

1) ஆசிரியர் : ................ 2) உண்மை : ................



3) ஏழைகள் : ................ 4) சுத்தம் : ................

5) ஊக்கம் : ................ 6) முதியோர் : ................

**08) பயன் பல பெறுவோம் என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.**

1) கடிதம் : ................ 2) நூல்கள் : ................

3) உணவு : ................ 4) பூர்த்தி : ................

5) மகிழ்தல் : ................ 6) பத்திரிகை : ................

**09) பின்வரும் எழுத்துக்களைப் பயன்படுத்தி சொற்களை அமைத்து உரத்து வாசிக்குக.**

| ஓரெழுத்துச்சொல் | ஈரெழுத்துச்சொல் | மூவெழுத்துச்சொல் | நான்கெழுத்துச்சொல் |
|---|---|---|---|
| நா | நாடி | நாக்கு | நாற்பது |
| தீ | ................ | ................ | ................ |
| ஈ | ................ | ................ | ................ |
| தா | ................ | ................ | ................ |

**10) பின்வரும் சொற்களுக்கான ஒத்து ஒலிக்கும் சொற்களை எழுதுக.**

1) பாதம் : ................ 2) தோடு : ................

3) தாளம் : ................ 4) வாதம் : ................

5) குமுதம் : ................ 6) வரம்பு : ................

**11) நெடில் சொற்களுக்குப் பொருத்தமான குறில் சொற்களை எழுதுக.**

1) பாட்டி : ................ 2) கூத்து : ................

3) கூடம் : ................ 4) வீண் : ................

5) ஊதி : ................ 6) வீதம் : ................

# நிர்வாக சபைத்தெரிவு

இலங்கை காசநோய் தடுப்புச் சங்கத்தின் நிர்வாக சபைத் தெரிவு இன்று முற்பகல் 10 மணிக்கு பண்ணை காசநோய் சிகிச்சை நிலையத்தில் வைத்திய கலாநிதி ஆர்.மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நீண்டகாலமாக நடைபெறாதிருந்த இந்த நிர்வாகம் வைத்திய கலாநிதியும், செயலாளருமான சற்குணநாதனின் ஏற்பாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (105)

# இளைஞர் கழகம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திறகுட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக ஜே/137 மானிப்பாய் வடக்கு இளைஞர் கழகத்திற்கான புனரமைப்பு சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இதன் போது ஜே/137 மானிப்பாய் வடக்கு இளைஞர் கழகத்திற்கான புதிய நிர்வாகசபையும் தெரிவு செய்யபபட்டது.

தலைவராக வ.நிரோயன், செயலாளராக க.உஷாயினி, பொருளாளராக வ.நிஷாயினி, அமைப்பாளராக க.ஜீவா னந்தன், உபதலைவராக தி.தாமினி, உப செயலாளராக பா.ஜெயரூபன் உள்ளிட்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் துறைரீதியாக விளை யாட்டுத்துறைக்கு த.கீர்த்திகன், கலா சாரம் மற்றும் அறிவிப்புத்துறைக்கு ந.அனித்தா, கல்விபயிற்சி மற்றும் தொழில் வழிகட்டல் துறைக்கு ப.பிரவீந் உள்ளிட்டவர்கள் தெரிவாகினர்.

ஜே/137 மானிப்பாய் வடக்கு கிராம சேவகர் ட.ரஜித்தா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் ச.செந்திற்குமரன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.அனுஷன், இளைஞர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.சுகிர்தா, வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஊடகச் செயளாளர் F.X.D.சுரே, கிராம மட்ட தலைவர்கள், மாதர் சங்க நிர்வாகிகள், இளைஞர் யுவதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (48)

# அபிவிருத்தியை விமர்சித்தவர்களே அதன் பயனைப் பெறுகின்றனர்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் வீதி அபிவிருத்திக்கு மாத்திரம் அரசு 600 கோடி ரூபாய்களை செலவு செய்திருக்கிறது இன்று அதன் பயனை வட பகுதி தமிழ் மக்கள் அடைந்திருக்கின்றார்கள்.

இவ்வாறான அபிவிருத்திகளை நிராகரிக்கின்றவர்களும், விமர்சிக்கின்றவர்களுமே இன்று அதன் பயனை முதலில் அனுபவிக்கின்றவர்களாக காணப்படுகின்றனர். என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வடக்கில் வீதி அபிவிருத்திக்கு மொத்தமாக 59.6 பில்லியன் ரூபா - கிட்டத்தட்ட 600 கோடி ரூபா செலவழிக்கப்பட்டிருக்கின்றது. இது மட்டுமல்ல, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமில்லாத கிட்டத்தட்ட 250 கிலோ மீற்றர் அளவு வீதி மிகத் துரித கதியில் புனரமைக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட 250 கிலோ மீற்றர் வீதிக்கு 6,700 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டிருக்கின்றது. இதில் முக்கிய விடயம் என்னவெனில், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமில்லாத கிராமப்புற வீதிகளைக்கூட அவ்வதிகார சபை பொறுப்பேற்று, புனரமைப்புச் செய்து, கிராம மக்களின் இலகுவான போக்குவரத்துக்கு வழியேற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமில்லாத 3.5 கிலோமீற்றர் வீதி கிட்டத்தட்ட 45 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள 525.8 கிலோமீற்றர் அளவு வீதிகளில் 210 கிலோமீற்றர் அளவு வீதிகளை RDA புனரமைப்புச் செய்திருக்கின்றது. மிகுதியாகவுள்ள 315 கிலோமீற்றர் அளவு வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியிருக்கின்றன.

குறிப்பாக, புலோலி - கொடிகாமம், கச்சாய் வீதி, வழுக்கையாறு, புங்குடுதீவு, குறிகட்டுவான் வீதி, 31 கிலோமீற்றர் நீளமுடைய பருத்தித்துறை - மருதங்கேணி வீதி, யாழ்ப்பாணம், பொன்னாலை - பருத்தித்துறை வீதி, கொடிகாமம்- புலோலி வீதி, சாவகச்சேரி - தனங்கிளப்பு வீதி, கொக்குவில், வட்டுக்கோட்டை வீதி, சாவகச்சேரி, கச்சாய் வீதி, காரைநகர் சுற்றுவீதி, மாதகல், பண்டத்தரிப்பு, சம்பில்துறை வீதி, புத்தூர், கந்தரோடை வீதி, சுதுமலை போன்ற வீதிகள் இதில் உள்ளடங்குகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்திலே 04 கிலோமீற்றர் நீளமுடையவற்றாப்பளை வீதியும் 07 கிலோ மீற்றர் நீளமுடைய சோரம்பற்று - தாளையடி வீதியும் இன்னமும் புனரமைக்கப்பட வேண்டியிருக்கின்றன.

அடுத்தடுத்த வருடங்களில் அமைச்சர், அமைச்சின் செயலாளர், மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிராந்தியப் பொறியியலாளர்கள் இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் வழங்குவார்களென்று நான் நம்புகின்றேன். வீதிகள் புனரமைப்பு மற்றும் உட்கட்டுமான அபிவிருத்திகள் என்பன மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு மிகவும் உதவியிருக்கின்றன. மக்களின் உற்பத்திப் பொருட்களை விரைவாக சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பை இந்த வீதி அபிவிருத்திகள் உருவாக்கியிருக்கின்றன.

வீதிகளை பாரிய செலவில் புனரமைக்கும்போது சிலர் விமர்சிக்கின்றனர். உண்மையில், உட்கட்டுமான அபிவிருத்தியில் வீதி அபிவிருத்தியானது எங்களது பிரதேசத்தின் முன்னேற்றத்துக்கு பிரதான பங்கை ஆற்றியிருக்கின்றது. அங்கு கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீதிப்போக்குவரத்துக்கூடாக எங்களது வட பகுதி தமிழ் மக்கள் அதிக பயனை அடைந்திருக்கிறார்களென்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என்றார்.

## முரசின் இன்றைய பலன்



(10.11.2014 திங்கட்கிழமை)

ஐய வருஷம் ஐப்பசி மாதம் 24 ஆம் திகதி.
சதுர்த்தி /அமிர்தசித்தம்
மிருகசீரிட நட்சத்திரம் பி.ப. 05.40 வரை. பின் திருவாதிரை.
இராகு காலம் 07.35 - 09.05 வரை. சுபநேரம் 12.05 - 11.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பலபேரிடம் விசாரித்ததால் தீர்க்கமான முடிவுக்கு வருதல், கடந்த காலத்தில் ஏற்பட்ட சங்கடமான சம்பவத்தை எண்ணி மனம் வருந்துதல் |
| ரிஷபம் | பயணத்துன்பம் ஏற்படும், பயிர்பச்சை நாசமடையலாம் |
| மிதுனம் | பழைய விலாசத்தைக் காட்டி காரிய சித்தி பெற முயற்சித்தல், குடும்பத்தில் அமைதி நிலவல் |
| கடகம் | உணவுக் கட்டுப்பாட்டினால் விடுபடல், துன்பத்திலிருந்து விடுபடல் |
| சிம்மம் | பயண முகவரியில் நம்பகம் அற்றுப்போதலினால் கட்டிய பணத்தை மீளப்பெறும் உத்தேசம், தேக ஆரோக்கியம் தொடர்பில் அக்கறை கொள்ளல் |
| கன்னி | அனுபவசாலிகளின் புத்திமதி கேட்டு செயற்பட விரும்புதல் |
| துலாம் | பெற்றோரின் வற்புறுத்தலினால் திருமணத்திற்கு சம்மதித்தல் |
| விருச்சிகம் | குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை விலகல், பெற்றோரின் நோய் காரணமாக தற்காலிகமாக பயணத்தைக் கைவிடல் |
| தனுசு | அஷ்டமத்துக் குரு இருப்பதினால் புதிதாக மனைக் அமைக்க விரும்பாமை, வியாபாரத்தில் நட்டம் ஏற்படல் |
| மகரம் | முற்றாகும் நிலையில் இருந்த விவாகம் குழம்பியதாக கவலையடைதல், பணமோசடி ஏற்படல் |
| கும்பம் | ஆபத்துக்கள் தொடர்பில் அவதானம் தேவை, மாமனார் பொறுத்த நேரத்தில் உதவி செய்து மானங்காத்தல் |
| மீனம் | சீவிய உரிந்து வைத்து எழுதாமல் விட்டதை எண்ணி வருந்துதல், பிள்ளைகளின் நடத்தை மெச்சும் நிலையில் தக்க வைத்தல் |

# இலங்கை நிர்வாக சேவையில் முஸ்லிம்களை புறக்கணிப்பது ஏன்?

## ஹுனைஸ் பாரூக் சீற்றம்



வடமாகாணத்தில் 33 பிரதேச செயலகங்கள் இருக்கின்ற போதிலும் ஏன் ஒரு முஸ்லிம் பிரதேச செயலராக நியமிக்கப் படவில்லை என கேள்வி எழுப்பியதுடன், இலங்கை நிர்வாக சேவையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஹுனைஸ் பாரூக் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு போன்றவற்றின் குழு நிலை விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஹுனைஸ் பாரூக் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் பத்து வீதத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் வாழ்வதோடு இருபத்தைந்து நிர்வாக மாவட்டங்களும் காணப்படுகின்றன. ஆனால் முஸ்லிம் ஒருவர் இது வரையில் மாவட்ட செயலர் பதவிக்கு நியமிக்கப்படவில்லை.

அதேபோன்று வடமாகாணத்தையெடுத்து நோக்கும் போது சுமார் முப்பத்து மூன்று பிரதேச செயலகங்கள் காணப் படுகின்றன. ஆனால் இவற்றுள் ஒன்றுக்கேனும் ஒரு முஸ்லிம் பிரதேச செயலர் ஒருவர் இது வரை நியமிக்கப்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இலங்கையில் உயர் கல்வி கற்று, பல பட்டங்களைப் பெறறு நிர்வாகசேவை உத்தியோகத்தர் பதவிக்கு தகுதிவாய்ந்த முஸ்லிம் பிரதிநிதிகள் பலர் உள்ள போதும் இவ்வாறான முஸ்லிம் கல்விமான்களுக்கு நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் பதவி மறுக்கப்படுவதாக முஸ்லிம் மக்கள் குற்றம் சுமத்துவதோடு இதற்கு நல்ல தீர்வைப் பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர் என்றும், இது தொடர்பில் கடந்த காலங்களில் பலமுறை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன விடம் நான் வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். அதற்கு எந்த முடிவும் இது வரை எடுக்கப்படவில்லை.

எனவே இது தொடர்பில் இன்று நாடாளுமன்றத்தில் அமைச்சரவர்களின் கவனத்திற்கும், நாடாளுமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு வருவதாகவும் இதனை உடனடியாக பரிசீலணை செய்து நிறைவேற்றுமாறும் வேண்டுகோள் விடுக்கிறேன் என்றார்.



சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றுவரும் வாராந்த நிகழ்வுகளில் கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாண வர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. கொஸ்லந்தை மண்சரிவில் இறந்துபோன உறவுகளுக்காக ஆத்மசாந்திப் பிரார்த்தனை அன்னைதாசன் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. (48)

# மாயமான 43 மாணவர்கள்

# மெக்சிக்கோவில் கொன்று குவிப்பு

## போதைப்பொருள் கும்பலின் அராஜகம்




மெக்சிகோவில் மாயமான 43 மாணவர்கள் போதைப்பொருள் கும்பலால் கொன்று குவிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

மெக்சிகோவில் கியூரெரோ மாகாணத்தில், அயாட்ஜினப்பா என்ற இடத்தில் ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஒன்று இயங்கி வரு கிறது. அதன் மாணவர்கள் சிலர், பாரபட்சமான பணி அமர்த்தல் பிரச்சினையை கண்டித்து போராட் டம் நடத்த முடிவு செய்து, அதற்கு நன்கொடை திரட்டுவதற் காக கடந்த செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி இகுவாலா நக ருக்கு சென்றனர்.


அப்போது அவர்களுக்கும், பொலிஸாக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. அப்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் பலியானார்கள். 43 மாணவர்கள் காணாமல் போனார்கள்.

இதையடுத்து மாணவர்கள் காணாமல் போன பிரச்சினை யில் மேயர் ஜோஸ் லூயிஸ் அபர்கா, அவரது மனைவி மரியா டி லோஸ் ஏஞ்சல்ஸ் பினிடா, போதைப்பொருள் கடத்தல் கும் பலினர் உள்பட 70இற்கும் மேற் பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் மாணவர் கள் மாயமான விவகாரத்தில் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் கடத்தல் கும்பலை சேர்ந்த 3 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதில் அவர்கள், - மாயமான மாணவர்களை பொலி சார் எங்களிடம் ஒப்படைத்தனர். அவர்களில் சிலர் ஏற்கனவே மூச்சு திணறடித்து கொல்லப்பட் டிருந்தனர். மற்றவர்களை நாங் கள் சுட்டுக்கொன்றோம். கொல் லப்பட்ட மாணவர்களை அடை யாளம் தெரியாமல் போவதற் காக தீயிட்டுக் கொளுத்தினோம் என கூறினார்.

சமீப காலத்தில் மெக்சிகோ வில் போதைப்பொருள் கடத்த லுக்கு எதிர்ப்பு தெரிவித்ததற்காக ஒரே நேரத்தில் 40இற்கும் மேற் பட்டோர் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதல் முறை ஆகும். அங்கு இந்தப் பிரச்சினையில் கடந்த 2006ஆம் ஆண்டில் இருந்து 80 ஆயிரத்துக்கும் அதிக மானோர் கொல்லப்பட்டுள்ளனர், 22 ஆயிரம் பேர் காணாமல் போய் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக் கது.


## "அக்னி"-2 ஏவுகணை சோதனை



அணு ஆயுதத்தை சுமந்து சென்று தாக்கக் கூடிய 'அக்னி'-2 ஏவுகணை சோதனை நேற்று ஒடிசா கடற்கரையில் நடைபெற்றது.

இந்த ஏவுகணை 2 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்துக்கும் அதிகமான இலக்கை நோக்கி சென்று தாக்கக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர்களை குறிவைத்து ஈராக்கில் குண்டு வீச்சு தாக்குதல்



ஈராக்கில் 'ஐ.எஸ்.ஐ.எஸ்.' தீவிரவாதிகள் பிடியில் இருக் கும் பகுதிகளை மீட்க அமெரிக் காவும், அதன் நேச நாடுகளும் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் மொசூல் அருகேயுள்ள அல்.கு யாயிம் நகரில் தீவிரவாத இயக்க தலைவர்கள் கூடியிருப் பதாக தகவல் கிடைத்தது.

எனவே, அங்கு அமெரிக்க போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. அதில், இஸ்லாமிய தேசத்தின் அன்பர் மாகாண ஆட்சியாளர் அபு முகானட் அல் ஸ்வேதாவி மற் றும் சிரியாவின் டெர்எல்ஷோயுர் மாகாண ஆட்சியாளர் அபு ஷக்ரா அல்மகாம்தி ஆகியோர் உயிரி ழந்தனர்.

இந்த தகவலை ஈராக் அதி காரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால், அவர்களுடன் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் தலைவர் அபுபகர்-அல் பக்தாரி யும் கொல்லப்பட்டார் என்றும், காயத்துடன் உயிர் தப்பியதாக வும் வதந்தி பரவியுள்ளது.

ஆனால், தீவிரவாதிகள் நடாத் திய கூட்டத்தில் அவர் பங் கேற்கவில்லை என்றும் உறுதி யாக கூறப்படுகிறது. ஆனால், 'இஸ்லாமிய தேசம்' சார்பில் இது குறித்து எந்தவித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த தாக்குதலில் தீவிர வாதிகளின் பல வாகனங்கள் அழிக்கப்பட்டதாகவும் குறிப்பாக 10 ஆயுத வாகனங்கள் அழிக் கப்பட்டு விட்டதாகவும் அமெ ரிக்க இராணுவ செய்தி தொடர் பாளர் பாட்ரிக் ரைடர் தெரிவித் துள்ளார்.

## ஈரான் அணுவிருத்தி தொடர்பான உயர்மட்ட மாநாடு ஓமானில்

ஈரானினால் மேற்கொள் ளப்படும் அணு தொடர்பாக மேற்கு நாடுகள் விதித்திருந்த காலக்கெடு எதிர்வரும் 24ஆம் திகதி நிறைவடையவுள்ள நிலை யில் ஓமானில் உயர் மட்ட கூட் டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தின் போது, அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி, ஈரானிய ராஜாங்க செயலாளர் ஜவாட் ஜாரியையும் மற்றும் ஐரோப்பிய ஒன்றத்தின் ஏற்பாட்டாளர் கத்தரீன் அஷ்ரன் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, ஈரா னிய அணு செறிவு படுத்தல் மற் றும் அது தொடர்பான விடயங் களுக்கு சுமூகமான தீர்வினை காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர்.


எப்படியிருப்பினும் அபிவி ருத்தி நடவடிக்கைகளுக்கு மட்டுமே தாம் அணு வலுவினை உபயோகப்படுத்துவதாக தொடர்ந் தும் ஈரான் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

## ஒருநாளில் ஒரு மில்லியன் ரஜனியின் லிங்கா திரைப்படம்

கே.எஸ்.ரவிக்குமாரின் இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் சொனாக்கஷி சிங்கா நடிப்பில் ரசிகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பை பெற்றுள்ள "லிங்கா"திரைப்படத்தின் ரீசர் நேற்று முன்தினம் நாளில் you tube தளத்தில் அண்மையில் வெளியானது.

ஏற்கனவே கோச்சடையான் படத்தின் போஸ்டர் டீசரும் முதல் நாளில் ஒரு மில்லியனைத் எட்டிய நிலையில் இப்போது "லிங்கா"





வும் சாதித்திருக்கிறது.

ஆயினும் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் நடித்த "ஐ" படத்தின் டீசர் செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்டு முதல நாளில் 23 லட்சத்திற் கும் அதிகமானவர்க ளால் பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பனிப்போரின் சின்னமான பெர்லின் சுவர் இடிக்கப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தி

பொலின் சுவர் இடிக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைந் ததை கொண்டாடும் முகமாக நேற்று கூகிள் இணையத்தள இலட்சினை மாற்றப்பட்டிருப் பதை காணக்கூடியதாக உள் ளது. பெர்லின் சுவர் என்பது கிழக்கு ஜெர்மனி மற்றும் மேற்கு





ஜெர்மனியைப் பிரிக்கும் சுவர் ஆகும்.

பனிப்போரின் சின்னமாகக் கருதப்படும் இச்சுவர் இரண்டு பகுதிகளையும் 28 ஆண்டுகளா கப் பிரித்து வைத்திருந்தது. இதன் கட்டுமானப்பணி 1961 ஓகஸ்ட் 13 அன்று ஆரம்பித்தது. இச் சுவர் பனிப்போரின் இறுதியில் 1989 இல் முற்றாக இடிக்கப் பட்டது. இக்காலப்பகுதியில் இச்சுவரைத் தாண்டி மேற்கு ஜெர்மனிக்குள் தப்ப முயன்ற 125 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பனிப்போரின் இறுதியில் உள்நாட்டுக் குழப்பங்களின் உச்சக்கட்டத்தில் கிழக்கு ஜெர்மனி அரசு 1989 நவம்பர் 9 இல் மேற்கிற்குள் செல்வதற்கு மக்களை அனுமதிப்பதாக அறிவித்தைத் தொடர்ந்து பல நூற்றுக்கணக்கானோர் சுவரில் ஏறி மேற்கிற்குள் நுழைந்தனர். பல்லாயிரக்கணக்கான மேற்கு ஜெர்மனியினர் இவர்களை மறு பக்கத்தில் இருந்து வரவேற் றனர். அடுத்த சில கிழமைகளில் இச் சுவர் இடிக்கப்பட்டது.

பேர்லின் சுவரின் வீழ்ச்சி ஜெர்மனி கிழக்கு மேற்கும் இணைவ தற்கு அடிப்படையாக அமைந்தது. இவை 1990 அக்டோபர்3இல் இணைந தன.



## ஆண் சாரதி கர்ப்பம் மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

### போதைப் பழக்கத்தால் வந்த. வினை



எகிப்தில் விபத்துக்கள் நடை பெறுவதை தடுக்க பஸ் சாரதி களுக்கு போதை மருந்து பரி சோதனை நடாத்தப்பட்டு வருகிறது.

அதற்காக அரச மருத்துவ மனைகளில் பஸ் சாரதிகள் பரி சோதனைக்காக சிறுநீர் வழங்க அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி பஸ் சாரதிகள் அனைவரும் தங்களது சிறுநீரை பரி சோதனைக்கு வழங்கினர். ஆனால் ஒருவர் மட்டும் தன் போதை பழக்கத்தை மறைக்க தனது மனைவியின் சிறுநீரை மாற்றி கொடுத்து விட்டார்.

இவரது கெட்ட நேரமோ அல்லது துரதிர்ஷ்டமோ தெரிய வில்லை. அந்த பஸ் சாரதியின் மனைவி 2 மாத கர்ப்பமாக இருந்தி ருக்கிறார். எனவே, அந்த சிறுநீர் பரிசோதனையில் கர்ப்பம் என தெரியவந்தது.

அதன்படி, பஸ் சாரதி கர்ப்பமாக இருப்பதாக அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டது. இதில் என்ன விசேஷம் என்றால் இந்த சிறுநீர் உங்களுடையது தானா என அதிகாரிகள் கேட்க பிரச்சினையில் இருந்து தப்பிக்க அவர் ஆமாம் என்று தலையாட்டினார்.

உடனே, அந்த அதிகாரி மழுப்பலுடன் கூடிய கிண்டல் சிரிப் புடன் 'நீங்கள் கர்ப்பம் அடைந்திருப்பதற்கு எனது வாழ்த்துக்கள் என கூறி கை குலுக்கி அனுப்பி வைத்தார்.

### இந்திய அமைதிப்படை மீதான

# கருணாவின் குற்றச்சாட்டு அரசியலுடன் தொடர்புபட்டது

## கேணல் ஹரிஹரன் தெரிவிப்பு

இந்திய அமைதிப் படையினர் இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு அரசியலுடன் தொடர்புடையது என்றே தாம் கருதுவதாக இந்திய அமைதிப்படையினர் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் கேணல் ஹரிஹரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமைதிப்படை மீதான குற்றச்சாட்டு தொடர்பில் எந்தவொரு விசாரணைக்கும் தயார். எனினும் ஏன் இந்தப்பிரச்சினை தற்போது எழுந்துள்ளது என்பது புரியவில்லை.

கருணா அம்மான் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு தளபதியாக இருந்தபோதே 300 முஸ்லிம்கள் காத்தான்குடியிலும், ஏறாவூரிலும் கொல்லப்பட்டனர்.

600 பொதுமக்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டமைக்கும் கருணாவே தலைமை தாங்கினார்.

எனவே அது தொடர்பான விசாரணைகளுக்கு கருணா ஒத்துழைப்பு வழங்குவார் என்று நாம் எதிர்ப்பார்க்கிறோம்.

கருணா தற்போது கூறியுள்ள இந்தக்குற்றச்சாட்டு பெரும்பாலும் அரசியலுடன் தொடர்புடையது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கருணா முற்றாக மக்களால் நிராகரிக்கப்படுவார்.

இந்தநிலையில் தம்மை தொடர்ந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அரசியலில் ஈடுபடுத்திக் கொள்வதற்காகவே கருணா இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் கருணா விடுதலைப் புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கும் இலங்கைப் படையினர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கும் விசாரணைகளை கோருவாரா என்றும் ஹரிஹரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 18 ஆவது...

ஜனாதிபதி இழைத்த மிகப்பெரிய தவறாகும் என அவர் தெரிவித்துள்ளார். தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது குறித்து உச்ச நீதிமன்றிடம் ஜனாதிபதி ஏற்கனவே சட்ட விளக்கம் கோரியுள்ளார்.

இன்றைய தினம் இது குறித்த விளக்கம் அறிவிக்கப்பட வுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படாத நிலையில் சட்ட விளக்கம் கோரியதன் மூலம், தேர்தல் ஆணையாளருக்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வேட்பாளர் ஒருவர் தேர்தலில் போட்டியிட முடியுமா இல்லையா என்பது குறித்து தேர்தல் ஆணையாளரினால் சுயாதீனமான தீர்மானம் எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சட்ட விளக்கம் மூலமாக வேட்பாளர் போட்டியிடுதல் தொடர்பில் தேவையற்ற தலையீடு செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலை சுயாதீனமான முறையில் நடாத்துவதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

### யாழ்...

எல்.ஏ.ஆர்.ரத்னாயக்க குறிப்பிட்டுள்ளார். இதன்படி எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் இரவு ரயில் ஒன்று சேவையை மேற்கொள்ளவுள்ளது.

இரவு 10.00 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் அந்த ரயில் காலை 6.55 அளவில் யாழ்ப்பாணத்தைச் சென்றடையும். மேலும் இரவு 08.40 இற்கு யாழில் இருந்து பயணத்தை மேற்கொண்டு காலை 5.30 இற்கு கொழும்பு கோட்டையை வந்தடையும் என எல்.ஏ.ஆர்.ரத்னாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

### தமிழருக்கான...

இருந்தாலும் அப்படித்தான். ஏனையவர்களுக்கு இருக்கும் பிரச்சினை தனிப்பட்ட ரீதியில் எனக்கு இல்லை.

நான் கொண்டுள்ள நிலைப்பாட்டை பல இடங்களில் தெரிவிக்கும் போது நான் நெருக்கடிகளை சந்தித்துள்ளேன்.

இதுதான் எனக்குள்ள பிரச்சினை. எவ்வாறாயினும் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற எனது நிபந்தனை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

நான் அதற்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றேன். பதவிகள் வழங்கப்பட்டதால், அரசாங்கத்திற்கு வந்த ஏனையவர்களின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கலாம்.

எனினும் எனது நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை. முன்னர் போல் அல்ல தற்போது கொஞ்சம் பொறுமையாக இருக்கின்றேன். அமைச்சர்கள் பலர் அதிருப்தியில் உள்ளனர்.

சகல அமைச்சர்கள் மீதும் ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்கள் இல்லை. சிலர் மீது அப்படியான குற்றச்சாட்டு உள்ளது. இது குறித்து அரசாங்கத்தில் பெரும் பிரச்சினை உள்ளது. அமைச்சர்கள் பலர் இது பற்றி பேசுவதுண்டு. இது எமக்குள்ள பெரிய பிரச்சினை.

வெளிப்படையாக பேசாவிட்டாலும் அமைச்சரவையில் உள்ள பல அமைச்சர்கள் இந்த ஊழல், மோசடி குறித்து வெறுப்பில் உள்ளனர்.

உலகில் சகல நாடுகளிலும் கூட்டணி ஆட்சியே நடந்து வருகிறது. தனிக்கட்சியின் ஆட்சிகள் எங்குமில்லை. பல்வேறு நிலைப்பாடுகளை கொண்டவர்கள் சேருவார்கள்.

பாரிய கொள்கை வேறுபாடுகள் உள்ளவர்களும் அதில் இருப்பார்கள். அத்துடன் பொது நோக்கத்திற்காக பணியாற்ற வேண்டும்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பொது நோக்கமாக யுத்தம் இருந்தது. யுத்தத்திற்கு பின்பு அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது பொது நோக்கமாக உள்ளது.

மக்கள் அத்துடன் நின்று விட மாட்டார்கள். மக்களுக்கு நல்லாட்சி அவசியம். ஜனநாயகம் சுதந்திரம், ஊழல் அற்ற சமூகம், கொலை கொள்ளையற்ற சமூகம், அத்தியவசியமானது.

தற்போது அது மேலெழுந்துள்ளது. போர் முடிந்து விட்டது. பல அபிவிருத்திகள் கிடைத்து விட்டன. கடந்த காலத்தை விட சிறந்த பொருளாதாரம் உள்ளது. தற்போது மக்களுக்கு நல்லாட்சி தேவைப்படுகிறது. லிபியாவின் கடாபி பொருளாதார ரீதியில் எப்படியான மாற்றங்களை கொண்டு வந்தார். மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினார்.

எனினும் மக்கள் கடாபியை துரத்தினர். கொலை செய்வதற்கு துப்பாக்கியை நீட்டும் போது நான் உங்களுக்கு செய்த தவறு என்ன என்று கடாபி கேட்டார்.

சகலவற்றையும் கொடுத்த கடாபி மக்களுக்கு சுதந்திரத்தை கொடுக்கவில்லை. கடாபி தனது குடும்பத்தினருக்கும் தன்னை சுற்றி இருந்தவர்களுக்கும் மட்டுமே சுதந்திரத்தை கொடுத்தார்.

மக்களுக்கு சுதந்திரம் இல்லை என்பதை கடாபி உணரவில்லை. அதேபோல் நாடு ஒன்று முன்னேற்றமடையும் போது சுதந்திரம், நல்லூட்சி, ஜனநாயகம் குறித்து மக்கள் பேசுவார்கள்.

தற்போது இலங்கையிலும் அந்த கோரிக்கையே முன்வைக்கப்பட்டு வருகின்றது என அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.


இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்



57 ஆவது அகவை காணும்
எம் அன்புக்கும்
மரியாதைக்குமுரிய
கௌரவ அமைச்சர்
கே.என்.டக்ளஸ்
தேவானந்தா
அவர்களை
நீடிய ஆயுளும் சகல
சௌபாக்கியங்களும்
பெற்று மகிழ்வுடன் வாழ வாழ்த்தி பிரார்த்திக்கின்றோம்.

1991 ஆம் ஆண்டிலிருந்து எம் மக்களின் இன்பங்களிலும் துன்பங்களிலும் உடனிருந்து வருகின்றமைக்காகவும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நெடுந்தீவிலும் முன்னெடுத்து வருகின்ற மைக்காகவும் மனதார நன்றிகளை இவ் இனிய நாளில் தெரிவித்து மகிழ்கின்றோம்.

நெடுந்தீவு அபிவிருத்தி பொதுச்சபை, பிரதேசசபை,
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
விவசாய சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள்,
மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூகநிலையங்கள்,
விளையாட்டுக்கழகங்கள்.

(C/3439)


### வடக்கு...

அனைத்து அதிகாரங்களும் இலங்கை மத்திய அரசின் கையிலேயே உள்ளது. இதனால், வடக்கு மாகாணத்தில் தமிழர் நலனுக்காக எங்களால் பாடுபட முடியவில்லை.

எங்களை இலங்கை அரசு செயற்பட விடாமல் தடுத்து வருகிறது. இதுதான் அவர்களின் முக்கிய குறிக்கோளாகவும் உள்ளது. அதிகாரமில்லாத வடக்கு மாகாண சபையில் முதலமைச்சராக ஏன் இருக்கிறீர்கள் என கேள்வி கேட்கிறார்கள். தமிழர்களுக்கு எதுவும் செய்ய முடியவில்லையே என்ற வருத்தம் எனக்கு உள்ளது.

இது தமிழ் பேசும் மக்களுக்கு மிகுந்த கவலை அளிக்கிறது. கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் ஊடுருவல்கள் அதிகரித்து வருகின்றன. இலங்கை சுதந்திரம் பெற்ற போது தமிழர் பகுதியில் சிங்களவர் 5 சதவீதம் பேர் மட்டுமே இருந்தனர். இப்போது அவர்களின் எண்ணிக்கை 35 சதவீதமாக அதிகரித்து விட்டது என்றார்.

### இறைவனடி...

யொன்றில் காலமானார்.

இரண்டு வாரத்திற்கு முன்னர் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் நேற்றிரவு காலமானார்.

சட்டத்துறையில் 46 வருடங்கள் பணியாற்றிய அவர் மன்னார், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறையில் மாவட்ட நீதிபதி, நீதவானாக பணியாற்றினார். இளைப்பாறிய பின்னர் குடியியல், குற்றவியல் வழக்குகளில் ஆஜராகி வந்தார்.

இவர் சிறந்த கவிஞர் என்பதுடன் கவர்ச்சிகரமான பேச்சாளருமானார். தனது மாணவ பருவ காலத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகத்துடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்டவராவார்.

இவர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

### ஜனாதிபதித்...

முத்தையா திடலில் நடைபெறவுள்ள மக்கள் பேரணி தொடர்பில் கருத்து வெளியிடும் வகையிலேயே இந்த ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அத்துரலிய ரத்ன தேரர்.

18 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் நிச்சயம் மேற்கொள்ளப்பட வேண்டும். கட்சி, நிற பேதமின்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு எதிராக மக்களை அணிதிரட்டவுள்ளேன்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் வகையில் பாரிய மக்கள் கூட்டமொன்றை ஒழுங்கு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### எரிந்த...

சடலமாக மீட்கப்பட்டவர் புலோலி வடக்கு, விஸ்வகுல ஒழுங்கையைச் சேர்ந்த லோகிதாசன் அம்பிகாவதி (வயது - 52) என்பவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணைகளை மேற்கொண்டார்.

### 29 ஐஸ்கிறீம்...

அறிவித்தல் விடுவிக்கப்பட்டுள்ளது.

இதில் எவ்வித உண்மையும் இல்லை. திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் 29 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களில், சுகாதார பரிசோதனைகள் எதுவும மேற்கொள்ளப்படாமல் ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கின்ற 12 நிறுவனங்கள் இருக்கின்றன. அதனைவிட, பாரிய ஐஸ்கிறீம் நிறுவனங்களின் கிளை நிறுவனங்கள் மற்றும் விற்பனை நிலையங்களையே மீண்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக வடமாகாண சுகாதாரத் திணைக்களம் கணக்கு காட்டியுள்ளது.

இந்த அறிவித்தலானது இன்று நடைபெறவுள்ள எங்களது கவனயீர்ப்பு போராட்டத்தை முடக்கும் செயலாகும்.

பரிசோதனை நடவடிக்கைகளால் தற்காலிகமாக மூடப்பட்ட சிறு ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்களாகிய 59 உற்பத்தி நிலையங்களும் மீண்டும் இயங்குவதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. இதனால், திட்டமிட்டபடி இன்று எங்கள் போராட்டம் யாழ். துரைப்பா விளையாட்டரங்கிலிருந்து முன்னெடுக்கப்படும் என்றார்.

# தொடர் இந்தியா வசம்



(ஹைதராபாத்)

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற 3 ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜயவர்த்தன 118, டில்சான் 53 ஓட்டங்களைப்பெற்றனர்.

பந்துவீச்சில் யாதவ் 4, பட்டேல் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலளித்து ஆடிய இந்திய அணி 44.1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் தவான் 91, கோலி 53 ஓட்டங்களைப் பெற்றனர். இவ்வெற்றி மூலம் தொடரை இந்திய அணி கைப்பற்றியது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஜயவர்த்தன தெரிவானார்.

# மண்சரிவு மீட்பு பணிகள்; கைவிடுவதாக அறிவிப்பு

(கொழும்பு)

கொஸ்லந்த, மீரியபெத்த மண்சரிவில் புதையுண்டோரை மீட்கும் பணிகள் கைவிடப்பட்டதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர இதனை நேற்று மாலை தெரிவித்துள்ளார்.

மண்சரிவில் புதையுண்டவர்கள் என்று கருதப்படுவோரின் உறவினர்கள் வழங்கிய எழுத்துமூல கோரிக்கையை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே புதையுண்டவர்கள் காணாமற் போனவர்கள் என்று கருதப்பட்டு அவர்களுக்கு ஒரு மாதக்காலத்துக்குள் மரணச் சான்றிதழ் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டமையால் உறவினர்கள் மீட்புப் பணிகளை நிரந்தரமாக நிறுத்த உடன்பட்டனர்.

எனினும் பின்னர் வந்த தகவலின்படி மரண சான்றிதழ்கள் இரண்டு வருடங்களின் பின்னரே வழங்கப்படும் என்பதன் காரணமாக உறவினர்கள், புதையுண்டவர்களை மீண்டும் தோண்ட வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்தநிலையிலேயே உறவினர்களின் எழுத்துமூல கோரிக்கையின் பேரில் மீட்புப் பணிகள் கைவிடப்பட்டதாக அமைச்சர் அமரவீர அறிவித்துள்ளார்.

# இன்று வெளியிடப்படுகிறது சோபித தேரரின் யோசனை

ஜனாதிபதித் தேர்தலுக்கு பொது அபேட்சகரைக் களமிறக்க தயாராகும் நீதியான சமூகத்தை நோக்கிய தேசிய அமைப்பின் யோசனைகள் இன்றையதினம் உத்தியோகபுர்வமாக வெளியிடப்படவுள்ளது.

இவ்வமைப்பின் ஏற்பாட்டாளர் மாதுலுவாவே சோபித்த தேரரின் தலைமையில் நடைபெறவுள்ள விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது இந்தச் சிந்தனைகள் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

பொது அபேட்சகர் ஒருவரை நிறுத்துவதற்கு உடன்பாடு தெரிவிக்கும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இன்றைய ஊடகவியலாளர் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஓரிரு நாட்களில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர், ஜனாதிபதித் தேர்தலுக்கு வரும் பொது அபேட்சகர் குறித்த தீர்மானம் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சமுர்த்தி வங்கிக்கு தீ சந்தேக நபர் கைது

(வவுனியா)

வவுனியா, சின்னபுதுக்குளம் சமுர்தி வங்கிக்கு தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வங்கியில் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். வங்கி தீ வைப்பு சம்பவம் குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கியில் இடம்பெற்றுள்ள முறைகேடுகளை மறைக்கும் பொருட்டு அங்குள்ள அதிகாரிகள் சிலருடன் சேர்ந்து இந்த தீ வைப்பு நடவடிக்கையில் இவர் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. குறித்த வங்கியின் அதிகாரி தற்பொழுது ஊரிலிருந்து தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மீன்பிடிப்படகுகள் கண்காணிப்பு; டென்மார்க்கில் இருந்து கருவிகள்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையை நீக்கிக் கொள்ளும் நோக்கில், இலங்கையில் மீண்பிடிப் படகுகளை கண்காணிபபதற்கான கருவிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

சர்வதேச சட்டத்திட்டங்கள் மீறப்பட்டமைக்காக இலங்கையில் இருந்து கடலுணவு பொருட்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருந்தது.

இந்த தடையைநீக்குவதற்காக, சர்வதேச சட்டத்திட்டங்களை உரிய வகையில் கடைப்பிடிக்க இலங்கை மீன்பிடி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் மீன்பிடிப் படகுகளை கண்காணிப்பதற்கான கருவிகளை, டென்மார்க்கில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக ஏழு மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்யக் கோரி பேரணி

நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்யுமாறு கோரி பாரியளவில் போராட்டமொன்று நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு முத்தையா பிள்ளை மைதானத்தில் எதிர்வரும் புதன்கிழமை இந்த போராட்டமும் பேரணியும் நடத்தப்பட உள்ளது.

நீதிக்கான சமூக அமைப்பின் அழைப்பாளர் மாதுலுவே சோபித தேரர் தலைமையில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் பங்கேற்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்யவும், நாடாளுமன்ற ஆட்சி முறைமையை அறிமுகம் செய்யவும் இன்னமும் ஜனாதிபதிக்கு கால அவகாசம் இருப்பதாக மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மயான மக்களின் கருத்துக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த செவிசாய்த்தால் ஜனாதிபதி தேர்தலையே அடுத்த ஆண்டில் நடத்த வேண்டிய அவசியம் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் காரணமாகவே நாட்டில் பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியின் விளக்கம் கோரல் தந்திரம் என்கிறார் சரத் என் சில்வா



மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா? என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதி மன்றத்திடம் விளக்கம் கோரியிருப்பது, வஞ்சகமான ஒரு நடவடிக்கையாகும் என முன்னாள் உயர் நதிமன்ற நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

ஐந்து நாட்களுக்குள் விளக்கம் கோரி நீதிமன்றத்திற்குக் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. இது போதுமானதல்ல. அத்துடன், நீதிமன்ற தீர்ப்பு வருவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான தினமும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றை அவதானிக்கும் போது எமக்கு நீதிமன்றம் தொடர்பில் நம்பிக்கையில்லை.

தற்பொழுது வழங்கப்பட்டுள்ள காலம் எழுத்து மூலமான அறிவிப்புக்களைச் செய்வதற்கு போதியதன்று. இதனால், நாம் இதற்கு எழுத்து மூலமான விளக்கங்களை வழங்க மாட்டோம் எனவும் முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், மூன்றாவது முறையாக போட்டியிடுவதற்கு எதிராகவுள்ள தடைகளை நீக்கிக் கொள்ள ஜனாதிபதி மேற்கொள்ளும் ஒரு தந்திரமே இதுவெனவும் முன்னாள் நீதியரசர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.


வடக்கு நாயகனுக்கு அகவை 57



அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

எளிமையின் வடிவான கோபுரம்!
ஏழை எளியவர் வாசலில் எரிகின்ற கற்பூரம்!
ஆயிரம் ஆயிரம் வறியவர் அடுப்பினில்
உலையினை ஏற்றிய உன்னதக் காவலன்!
வலிதனில் கிடந்து வதங்கிய தமிழரின்
சிலுவையை சுமந்து வருகின்ற பகலவன்!

வலிமை கொள் தலைவா உன் வழிதனில்
அலையெனத் திரண்டு நாங்கள் வருகின்றோம்
அன்பினில் சொரிகின்ற வாழ்த்தினைத் தருகின்றோம்
காலம் கடந்திடும், காற்று ஓய்ந்திடும், ஆனால் பார்க்கும்
இடமெல்லாம் உந்தன் பெயர் எழுத்தில் இருந்திடும்.

சமூக சிந்தனையோடு சாதனை செய்திடும்
எம் வடக்கின் நாயகனை பல்லாண்டுகாலம்
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.
யாழ்ப்பாண பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம், திருநெல்வேலி.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.